# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௨. புத். சஞ். ௨௨.] ௲௮௱௪௨ ௵. கார்த்திகை. ௰௭,தேயதி வியாழக்கிழமை, Thursday, November 17, 1842. [Vol. II. No. 22.


## A dialogue between a Brahmin and a student of the Batticotta Seminary on the doctrine of transmigration.

## இது ஓர்பிராமணனுக்தும் வட்டுக்கோட்டையிற் சாஸதிரப் பள்ளிக்கூடத்திற் படித்துவருகிற ஓர்சிறு மாணாக்கனுக்குந் நடந்த சம்பாஷணை.

பிராமணன். ஏது தம்பி எங்கே நின்று வருகிறாய்?

மாணாக்கன். வட்டுக்கோட்டையிற் சாஸதிரப் பள்ளிக்கூடத்தில் நின்று வருகிறேன். ஐயா எங்கே இருக்கிறது?

பி. நான் இராமேசுரத்தில்வைதிகாகளில் ஒருவன், இவ்விடத்துப் பிராமணுக்களுக்குப் புரோகிதமுந்நான்தான். தம்பி, சாஸதிரப் பள்ளிக்கூடமென்றாய் அதில் என்ன சாஸதிரங்கள் படிக்கிறது?

மா. வான சாஸதிரம், புவன சாஸதிரம், முக்கோண சாஸதிரம் முதலான சாஸதிரங்கள்தான்.

பி. ஆமோ இவைதானோ சாஸதிரங்கள்; கேள் தம்பி, சாஸதிரம்ஆறு-பாட்டம், பிரபாகரம், வேதாந்தம், உத்தரமீமாம்சை, பூருவமீமாம்சை வைசேஷிகம்.

மா. ஏன், பல்விச் சாஸதிரம், கூகைச் சாஸதிரம், பஞ்சபட்சிச் சாஸதிரம் இப்படிப்பட்ட சாஸதிரங்களுமுண்டல்லவா?

பி. அவைகள் வீண் சாஸதிரங்கள் அவைகளை வித்துவாமசர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. விசேஷித்த நூல்கள் நாலு வேதம், ஆறு சாஸதிரம், இருபத்தெட்டாகமம், பதினெண் புராணம், அறுபத்துநாலுகலைக்ஞானம் முதலானவைகளே. இவைகளில் நீ சொன்ன சாஸதிரங்களும் அடங்குமா?

மா. இல்லை, நாங்கள் முன் சொன்னசாஸதிரங்களை இங்கிலீஸப் பாஷையிற் படிக்கிறோம்.

பி. ஏன் தமிழ்ப் பாஷையில் ஒன்றும் படிக்கிறதில்லையோ?

மா. தமிழ்ப் பாஷையிலே நன்னூல், திருவள்ளுவர்குறள், எண்ணல் இம்மூன்று மாத்திரம் படித்துவருகிறோம். மற்றவை பொய்யுஞ் சிற்றின்பமுள்ளவை யாதலால பாதிரிமார் எங்களுக்குப் படிப்பிக்கிறதில்லை.

பி. சரிதான் காந்தம் முதலிய புராணங்கள் நீங்களிருக்கிற இடங்களில் வாசிக்கக் கேட்கப் படிக்கக்கூடாது. அத்தை விலக்கிக்கொண்டது நல்ல காரியந்தானே.

மா. ஆமது எங்களுக்கு நல்ல காரியம் நாங்களதைமனப்பூரணமாய்ப் படிக்கவும் கேட்கவும் சம்பவித்தால் கந்தசுவாமியைப் போலக் காமத் தூர்த்தராய் ஒன்றுக்கிரண்டு பெண்சாதிகளை வைக்கவும் ஆயிரந் தலையுள்ள சிங்கமாசூரன் இருந்தானென்றும் இல்லாத பொய்களை நம்பவும்வேண்டிவரும்.

பி. ஏன் திருவள்ளுவர் படிக்கிறோமென்கிறாயே அதிலே காமத்துப் பால் இல்லையா? பாதிச் சுரைக்காய் கறிக்கும் பாதிச் சுரைக்காய் விதைக்குமா?

மா. காமப்பாலுண்டு. நீர் நீக்கிப்பால்கொள்ளும்அன்னம்போல அத்தை நாங்கள் முற்றுகவே திரும்பிப் பார்க்கிறதில்லை. அறிவும் விவேகமுமுள்ள திருவள்ளுவரிலதைச்செய்தது குற்றம்.

பி. அதை எப்படிக் குற்றமென்று சொல்லலாம். அறம் பொருளின்பம்வீடடைதல் நூற்பயனென நாற்பொருட்பயன் நாலுக்கு வைத்திருக்கிறபடியினாலஅந்த ஒழுங்கைப் பற்றி அவர் செயதார்.

மா. இவ்வகை நாற்பொருட் பயன் நாலுக்குண்டென்று வைத்துக் கட்டிக்கொண்டது தப்பிதம். அதற்கிசையத் திருவள்ளுவர் காமப்பால் செய்துகொண்டதே அவரிலுள்ள குற்றம். அது அவருடைய சன்மார்க்க நடைக்குப் போதியதல்ல, பஞ்சலக்கணத்திலும் பொருளெழுதினவிடத்து முன்னுள்ளோர் அத்தை அகப்பொருள், புறப்பொருளென இருவகையாகப்பிரித்து அகப்பொருளிலே காமத்தையும் புறப்பொருளிலே படைச் சேவுகத்தையும் செய்தார்கள். காமத்தில் அழுந்தின முன்னோர்கள் பொருளிலக்கணஞ்செயவதற்கு அதையே பொருளாய்க்கொண்டார்கள். அதைப் படிப்பவர்களும் இந்நாள் வரைக்கும் எவ்வளவு படித்தாலுஞ் சன்மார்க்கராய் நடக்கவழியற்றுப்போயிற்று.

பி. அகப் பொருளிலே காமத்தைச் சொல்வது தகாதெனில், சகல் நூலாசிரியர்களும் அத்தை ஒப்புக்கொள்ளுவார்களோ?

மா. அவர்களெல்லாரும் அதற்குச் சம்மதித்ததற்கு நியாயமுண்டு. முதலாவது கல்வி கற்பது இளமையில்லாததினால் அவர்கள் ஆசை இச்சைகளுக்கிசைந்திருக்கும். இரண்டாவது, அவர்களுடைய மார்க்கத்திற்கு அது தள்ளுபடியல்ல. தேவுக்களைக்குறித்தும் அவலெட்சணமான்கதைகளைச் சொல்லுவார்களே. தமிழ்நன்குணர்ந்த வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கமெனப் பஞ்ச இலக்கணஞ் செய்த விடத்துகாமந் தகாதெனத் தள்ளி வேறு பொருள் செய்தார். பொருள் செய்யவேண்டிய நோக்கத்தைப் பார்த்தாலுங் காமமதற்குவேண்டியதல்ல, அதனால் வருங்கேட்டை எடுத்துச் சொல்ல மிகப் பெருகும்.

பி. திருவள்ளுவரிலே காமத்துப் பால் தள்ளி மற்றிரு பாலிலுஞ் சொல்லப்பட்ட கருத்துக்களை நீங்களும் உங்கள் பாதிரிமாரும் ஒப்புக்கொள்ளுகிறதுண்டோ?

மா. இல்லை இல்லை, அதிற் தள்ளுபடியான கருத்துக்கள் அநேகமுண்டு. அவைகளிற் பிரதானமானது பிறவியுண்டென்பது.

பி. பிறவியுண்டென்பது என்னத்தினாற் தள்ளுபடியான கருத்து இல்லையென்பதற்கு அத்தாட்சி என்ன!

மா. ஒரு காரியத்தை உண்டென்று சொல்லுகிறவர்கள் அதற்கு அத்தாட்சி சொல்லுகிறதேயன்றி இல்லையென்று சொல்பவர்கள் நேர் நியாயங் கொடுப்பது சுபாபமல்ல. அது அவர்களுக்கு உடன்பாடுமல்ல, பிறவியுண்டென்று நாம் கொள்ளுகில் அதற்கு அத்தாட்சி கொடுப்பது நமது கடன். அதின் பிறகு பிறவி இல்லையென்பதற்கு என்னுவியன்றளவு நியாயங்களைச் சொல்லுவேன்.

பி. நல்லது நான் சொல்லுகிற நியாயங்களைக் கேள்?

மா. எப்படிச் சொல்லப் பார்ப்போம்?

பி முதலாவது இல்லாததுவாராது, சொல்லாதது பிறவாது, ஆகையால பிறவியென்றது இல்லாதிருக்குமேயானால் அத்தை எப்படி எல்லாருமுண்டென்று பேசவரும்.

மா. அது இல்லாத காரியங்களும் உண்டென்று தமிழிலே மெத்த மெத்தச் சொல்லியிருக்கின்றது. உதாரணமாக, மகாமேரு மலை, சந்திரகாந்தக்கல், ஐந்தலைநாகம், ஆனையிருஞ்சிப்புள், ஆதிசேடனென்னுங் கணக்கில்லாப் பொருள்களை உண்டென்று பொய்யாகக் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆகில், இவைகளைப் பற்றிப் பேசுகில் நாமெடுத்த காரியந் தம்பிட்டுப்போம். இது நிற்க, பிறவி உண்டென்பதற்கு நாம் சொல்லும் இரண்டாம் நியாயம் என்ன?

பி. எந்தக் காரியத்துக்கும் யாதொரு காரணமுள்ளதாய்க் காரணமின்றி யாதொரு காரியமுண்டாகாததுபோலக் காரியமின்றியும் யாதொரு காரணமுள்ளதாய் இருப்பதில்லை. அதற்குக் காரணமான நிலை அல்லது ஊழிருப்பதினாலும் அந்த ஊழ் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என்னும் மூவகைக் கன்மத்தினால் விளைவுற்று வருதலினாலும் காரணமாகிய ஊழ் கிடக்கக்காரியமாகிய பிறவிதோன்றும், ஆகையாற் பிறவியுண்டென்று நம்பவேண்டும்.

மா. நாம் பிறவிக்குக் காரணம் ஊழென்று சொல்லியும் ஊழுக்குக் காரணம் பிறவியென்று சொல்லுகிறதாகவுந் தோற்றுகின்றது. ஒருவன் பிறந்து செய்யும் ஆகாமியங்கள் சஞ்சிதமாகி அவனை மறுபடி பிறப்புவிக்கும் ஊழிடத்தில் நின்று அவன் அநுபவத்திற்குப் பிராரத்துவமாகுதென்று நாம் சொல்லுகுது. பிறவிக்கு ஊழ் காரணமாயும், ஊழ் விருத்திக்குப் பிறவி காரணமாயும் இருக்குமேயாகில் ஒன்றுலொன்றெப்படி உண்டாகக்கூடும். எது முந்தினது? இரண்டும் ஒரே வேளையில் உண்டானதாகில் ஒன்றுக்கொன்று காரணமல்ல. ஆகையினால் நாம் இப்பொழுது பிறந்திருக்கும் பிறவிக்கு ஊழ் காரணமல்லவென்றறியவேண்டும்.

பி. நீ இருவளத்தையும நெருக்கி முட்டுப் பிடியாய்ப் பிடிக்கிறாய். இரண்டும் அனாதி தொடுத்துத் துவக்கமின்றித் தேர்ச்சில்லுப்போல நடைபெற்று வருகின்றனவென்றாலென்ன?

மா. அப்போ கத்தாவுக்குச் செலவென்ன? அல்லாமலும் ஊ

மும் பிறவியும் ஒருவாற்றாற் காரியமாய் நிற்கிறபடியால் அனாதி நித்தியமாகா.

பி. உலகத்தில் ஒருவன் வறியவனாகவும் மற்றவன் பணக்காரனாகவும் ஒருவன் சிவிகைபொறுத்தோனாகவும் மற்றவன் சிவிகையூர்ந்தோனாகவும் இப்படிப் பலபேதாபேதமாக மனுஷர் பிறந்திருப்பதைப் பார்க்கிறபொழுது பராபரன் நீதியுள்ளவராயிருக்கிறபடியால் ஊழென்னுங் காரணம் முற் பிறவியினது கன்ம பலாபலத்தினால் இப்பேதா பேதத்துக்கு வழியாயிராவிட்டால் இதற்கு வேறு காரணம் இல்லையே; நீதியுள்ள கத்தர் ஒருவனைப் பெரியவனாகவும் மற்றவனைச் சிறியவனாகவும் படைக்கமாட்டாரே. ஆகையால் முற்பிறவியுண்டென்றும் இப்பிறவியிற் செய்யுங் கன்ம பலாபலங்களால் விருத்தியாகின்ற ஊழ் காரணமாகிய மறுபிறவியுண்டென்றும் நிச்சயிக்கவேண்டும்.

மா. ஒரு உலகம் நடைபெற்றுவருகிறதற்கு அதிலுள்ள படைப்புக்களெல்லாம் பேதாபேதமாயிருக்கவேண்டியதவசியம். எல்லாப் படைப்புமொன்றாய் ஒரேவிதமாய் இருக்கில் இராசா, குடியானவன், ஆண், பெண், மனுஷர், மிருகம் முதலான வித்தியாசமற்று உலகமும் நடைபெறாது. சகலத்தையும் ஆனையாய்ப் படைப்பதோ அல்லது பூனையாய்ப் படைப்பதோ என்னுமொரு வில்லங்கமுமுண்டாகும். உலகத்திற் காணப்படும் பேதாபேதமான தன்மை கத்தாவுடைய நீதிக்குப் பொருந்தாதென நாம்சொன்னது. நீதியாவது ஒருவர் செய்கைக்குத் தக்க பலாபலனை அளிப்பது; ஆகையால், மனுஷர் முற்பிறவி இல்லாதவர்களாகவும் அதினாற் செய்கையில்லாதவர்களுமாயிருக்க இப்பிறவியில் அவர்கள் அநுபவிக்குங் காரியத்தை நீதிக்குப் பொருத்த இடமில்லை. ஒருவனுடைய சரீரத்திலுள்ள அவயவங்களிற் சில கனமுள்ளவைகளாயும், சில கனமற்றவைகளாயும் இராமல் எல்லாங் கண்ணாக அல்லது எல்லாங் காலாக இருக்கில் அவனுடைய சரீரம் பயன்படாததுபோல உலகத்திலுள்ள தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாபரமுதலான பேதாபேதமில்லாவிட்டால் உலகம் பயன்பட்டு நடைபெறாது. ஒருவனுடைய அவயவங்கள் என்ன பலாபலன்களைச் செய்தன?

பி. உலகம் நடைபெறாதென்று நீ சொன்னது மெய், அந்த நியாயத்துடனே நான் சொன்ன நியாயத்தினாலும் பிறவியுள்ளதாயிருந்தாலென்ன?

மா. ஒன்று இருக்கலாம் அல்லது இருக்கக்கூடுமென்பது அது உண்டென்பதற்கு அத்தாட்சியல்ல. நாமநுபவிக்கும் நன்மை தின்மைக்குப் பிறவியையும் அத்தைச் செய்யுங் கன்ம பலாபலன்களையுங் காரணமாய்க்கொள்ளுகில், ஆகத் தொடக்கத்திலுண்டான பிறவியில் உலகத்திலுள்ளவையைக் கத்தா என்னவாகப் படைத்தாரோ—பிறவியநாதியானாற் கத்தாவில்லை அவர் நீதியைப் பற்றிப் பேசவேண்டியதுமில்லை.

பி. உலகத்தில் ஒருவன் பிறந்தநாட் பிறந்து வியாதியுந் துன்பமுமாய்க்கிடந்தழுந்தி வயிற்றுக்கில்லாமல் இருந்து மெலிந்துநொந்து செத்தான். அவன் முற்பிறவியிற் செய்த கன்மதோஷத்தாலொழிய மற்றும்படி அவன் அவ்வளவு துன்பப்படவேண்டியதென்ன?

மா. இப்படிப்பட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லுகில் மூட்டுப்பாடு தீரப் பிறவியுண்டென்று வைத்துக்கொள்ளுகிறதல்லாமல் அது உண்டென்பதற்கத்தாட்சியில்லை. இக்கேள்விக்கு மறுமொழிசொல்ல நமக்குத் தெரியாதென்றாலென்ன? அப்படி நமக்கு விளங்காத கத்தாவுடைய சூட்சம் அநேகம் இல்லையோ? என்றாலும் முந்தின கேள்விக்கு நாம் போதிய மறுமொழி சொல்ல இடமில்லையோ? துன்பப்பட்ட அந்த ஆத்துமா அழியாதென்றென்றைக்குஞ் சீவித்திருப்பதால் மறுமையிலே அதாவது, மறுபிறப்பிலல்ல கத்தர் அதற்குப் பேரின்பத்தைக்கொடுக்கக்கூடும். காட்டில் நிற்கும் ஓர் ஆட்டை ஒருவன் கட்டியிழுக்க அது மாட்டோமென்று வெருண்டு பின்னிட, அவன் அத்தை வலித்து நிலம் வழியே குறகுறென்றிழுக்க அதினுடைய கழுத்திற் றோலுரிந்து மேல்காலெல்லாம் இரத்தவாறாய் ஓடக், கண்டவர்கள் அவனைக் கொடியனென்றும், அநீதனென்றுஞ் சொல்லி ஆட்டையும் ஐயோ! இந்தப் பாவி இவ்வளவு பாடுபட என்ன துரோகஞ் செய்ததெனத் தங்களறியாமையாற் புலம்புவார்கள். ஆனாலும் அவன் அந்த ஆட்டைக் காட்டிலிருந்து வேட்டைப் புலி பட்சியாமல் வீட்டில் நின்று சதங்கை கிண்கிணிமுதலான ஆபரணங்கள் அணிந்து சிறுபிள்ளைகளுடன் செழிப்பாய் விளையாடப்பண்ணுவதைக் காண்பார்களாகில், முன்னவனிற் கண்ட அநீதம் நன்னீதமாகவும் ஆட்டிற் கண்ட துன்பம் இன்பமாகவும் நல்ல நியாயத்தைக் கண்டு அக்களிப்பார்களே; அதுபோல, இவ்வுலகத்தில் நாமடையுந் துன்பங்களுக்கு முற்பிறவியினது கன்மங் காரணமாய்க்கொள்ளாமல் இனிமேலடையும் இன்பங் காரணமாகவுங்கொள்ள இடமுண்டு. நல்லகுருபரனார் நம்மை வருத்துவது கொல்லவல்லப் பொல்லாக் குணம்போக்க.

பி. உலகத்திலொருவன் கொலை, களவு, கள், காமம், குருநிந்தை முதலிய பஞ்ச பாதகங்களைச் செய்து இராசாக்களால் தன் செய்கைக்குத்தக்க ஆக்கினை அடையாமற் தப்பிக்கொண்டு மகா செல்வனாய் இருந்திறந்துபோனால், அவன் செய்த பாதகங்களுக்கு இவ்வுலகத்தில் யாதொரு தண்டனை அடையாதபடியால் மறுபிறப்பிலே அவன் நாயாக அல்லது நரியாக அல்லது பின்னொரு இழிவான பிறப்பாகப் பிறப்பானென்று நாம் எண்ணுகிறதற்கிடமுண்டல்லவா?

மா. இவ்வுலகத்திலே கொடுமையான பாவங்களைச் செய்பவனுக்கு மறுமை இல்லையென்று நான் சொல்லவில்லை. அந்த மறுமை மறுபிறப்பாயிருக்கவேண்டியதுமில்லை. அவனவன் செய்த செய்கைக்குத் தக்கதாகக் கத்தர் அவனவனுக்குப் பலனளிப்பார். அது பிறவியின்றி நரக சொற்கங்களிலெனக்கொள்ளலாம். மேலும் ஒருவன் நாயாக அல்லது நரியாகப் பிறந்தால் மிருகப் பிறவி கன்மவிருத்திக்குக் காரணமாயிராதபடியால் அதாவது, மிருகங்கள் நன்மை தின்மையென்னும் இருவினைகளை நயந்துபயந்து நடக்கும் விஷயமில்லாதபடியால் அப்பிறவியில் வந்து பிறக்கப்பட்ட ஆத்துமாக்கள் மறுபடி பிறப்பதற்குக் காரணமில்லையே. அதன்பின் பிறவி அற்றுப்போமே?

பி. ஆத்துமாக்கள் தாம் செய்யும் கன்ம தோஷத்தினால்நாயாக அல்லது நரியாக வந்து பிறந்தாலும் தாம் முற்பிறவியிற் செய்த நன்மையினால் சில புண்ணிய ஸ்தலங்களில் வந்தடையவும் நற்பிறவி பிறக்கவும் கூடியதாய் இருக்கும்.

மா. ஒரு ஆத்துமா தான் செய்யும் நற்செய்கை ஒரு பக்கத்தில் இருக்கவும், தான் செய்யும் துற் செய்கையால் மிருகமாய்ப் பிறக்கவும் வேண்டியதென்ன? அந்த நற் செய்கை விடுமா? இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து சமன்பண்ணி மேன்மிச்சமாயிருக்கப்பட்ட நன்மைக்கல்லது தீமைக்கு ஏற்றதான பிறவியிலே அலலோ பிறக்கவேண்டும்.

பி. அதப்படிக் காணாது, ஆத்துமாக்கள் செய்யும் நல்வினை தீவினை இரண்டிற்கும் அழிவின்றி அவையை அநுபவித்துத் தீரவேண்டும்: இவ்விதமாய்க் கன்மத்தினாற் பிறவியும் பிறவியினாற் கன்மமும் நடைபெற்று வரும்.

மா. கன்மமும் பிறவியும் ஒன்றாலொன்று விளைந்து நடைபெற்று வருவது கூடாதென்பதற்கு முன்னமே நல்ல நியாயங் காட்டினேன் என்றாலும் பிறவியைப்பற்றி அவரவர் நினைத்தபடி பற்பல பேதங்களாகச் சொல்லுகிறபடியால் அது மிகவுங் குழப்படியாயிருக்கின்றது. அதினொழுங்கு சரிவர நமக்குத் தெரியாது ஆகிலும் பிறவி கன்மகாரணத்தினாலுண்டானது போல மற்றெந்தக் காரியத்துக்குங் காரணம்விசாரிக்கிறதினால் ஆத்துமாக்கள் இடேற்றமடைவதற்குக் காரணமென்ன?

பி. நல்வினை தீவினை இரண்டுஞ் சமரசப்பட்டகாலத்தில் ஆத்துமா இடேற்றமடையும் அதுவே அதற்குக் காரணம்.

மா. நாம் முன் பேசினவிதத்தினால் கன்மமும், பிறவியும் முடிவில்லாமற் போகிறதாய்க் காணப்பட்டது. ஆகில் முடிவுள்ளதாயிருந்தாலும் ஒரு கத்தாவினுடைய செயலை இங்கே காணவில்லை. கத்தா உண்டென்று சொல்லியும் அவரை நிர்க்குணனாக்கிச் செயலற்றவராய்க் கட்டிப் பொதிந்து மூலையிலே வைத்துவிட்டீர்கள். கத்தா யாதொருசெயல் நடத்துகில் அவருக்கென்ன ஊழிருந்ததென்று கேட்கவருகிறீர்கள். பிறவியுண்டென்பதற்கு வேறே தாகுதல் நியாயமுண்டானாற் சொல்லிமுடிக்க?

பி. காண்டல், கருதல், உரையென்னு மூவகை அளவையுள் உரையென்னும் அளவையைக்கொண்டு இதுகாரியத்தைமிகவுந்தெளிவாய் ரூபிக்கலாம், பிறவியுண்டென்று வேதங்கள் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

மா. நல்லது நான் அதைப் பிறகு சொல்லுகிறேன், நாம் சற்றே தயவுபண்ணி வேதத்தில் அலலது ஆகமத்திற் பிறவியுண்டென்பதைப்பற்றி ஒரு வாக்கியஞ்சொல்ல?

பி. நீயொரு பதிதனாயிருக்கிறாய் உன் காதிலே கேட்கத்தக்க

தாக அந்த மேலானவாக்கியங்களில் ஒன்றுஞ் சொல்லக்கூடாது.

மா. உமக்கையாவேதந் தெரியாது நான் சும்மாகேட்டது எதுவுஞ் சிமிஸ்திபார்த்திருக்குமாக்கும் அது எங்களுக்குந் தெரியும் உம்முடைய பிரமகாயத்திரிகூட எனக்கு வாய்ப்பாடம். நாம் சொல்லாவிட்டால் விட.

பி. நல்லது இந்தப் புருடாவெல்லாம் ஆருக்குவிடுகிறுய? நீயெங்கே! சுருதிசிமிர்தியெங்கே? உன்னைப்பார்த்தால் ஒரு புழுப்போலே பொடியன் உனக்கிதார் சொல்லித்தந்தது?

மா. பிரமகாயத்திரி நான் சொல்லப்போனால் ஐயா கோவித்துக்கொள்ளும் பிறவியுண்டென்று ஆகமத்திற் சொல்லுகிறேன் பார்க்க, வினையினால்விளைந்தயாக்கை மீளவும் வினையேயாகும் தினையளவெனினும்யானுற்செய்ததொன்றில்லையென்றே நினை.

பி. சிவசிவா, ஐயோ! இந்த நூல்களையெல்லாம் வெள்ளைக்காரன் கையிற்கொடுத்துவிட்டார்களே, என்னசெய்வோம்!

மா. ஐயா வரவர நான் படியாமல் விட்டுவிடுகிறேன் ஆனால் எனக்கொரு சந்தேகமிருக்குது கேட்க, வண்டுகளாயுமாறும் மயிர்க்குட்டிமற்றோர்செந்து பண்டையவுருவந்தானே வேட்டுவன் வடிவங்கொண்டு கண்டுகொள்யோனியெல்லாங் கன்மத்தால்மாறுமன்றே.

பி. ஆ!ஆ! சிவசிவா.

மா. ஐயா வ வர நானினி ஆகமத்துப் பாட்டுச் சொல்லவில்லை. நானினிப் பிரமகாயத்திரி சொல்லப்போனால் ஐயா என்னபாடுபடுமோ தெரியாது.

பி. பிறவியுண்டென்பதற்காகம அத்தாட்சி சொன்னது புலப்படவில்லையா?

மா. வேதங்களிலும் ஆகமங்களிலும் பிறவி இருக்கிறதென்று சொல்லியிருப்பது மெய். அதை உண்மையென்று நம்பக்கூடாது. அவை தேவமூலமாய் உண்டானதென்று நாம் முதல் எண்பிக்குமேயாகில், பிறகு அதகிற் சொல்லியிருக்கிறதற்கத்தாட்சியில்லாதுபோனாலும் நாம ஏற்றுக்கொள்ளவேண்டும். நாங்களோ வேதங்கள் சாஸ்திரங்கள் ஆகமங்களெல்லாந், தப்பானவையென்றும் அவைகள் தேவ மூலமாய் வரவில்லையென்றுஞ் சொல்லுகிறோம், அதற்கத்தாட்சிகளுமுண்டு. ஆகில் நாம் விசாரித்தறியத்தக்கதாக ஒன்று மாத்திரஞ் சொல்லுகிறேன். வேதத்தில் நாலும், சாஸ்தரத்தில் ஆறும் ஆகமத்தில் இருபத்தெட்டும் வந்ததேதென்பதை முதல விசாரித்துப் பார்க்க. முன்னுள்ள படிப்பாளிகள் கத்தாவையும் ஆத்துமாவையும் பாசத்தையும் பற்றித் தாங்கள் தாங்கள் கொணட கருத்துப்போல ஒவ்வொரு நூல்களை எழுதியும் அவைக்குப் பூருவ சித்தாந்தத்தை நிருபித்துப் பாட்டம, சாங்கியம,நையாயிகம், பிரபாகரம், சைவம், வைணவம்,நிரீச்சுரவாதம், டஞ்சாரத்திரம், சத்தப்பிரமவாதம், வைரவம்,காளாமுகம், பாசுபதம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை, துவிதம், அத்துவிதம் முதலான எண்ணடங்காத பேதாபேதமாகி இருக்கப்பட்டவைகளைச் சாஸ்திரங்களென்றும், ஆகமங்களென்றும ஒழுங்காகத் தொகுத்திருக்கிறதேயல்லாமல் கத்தாவால் அருளப்பட்டதேயாகில் ஒப்பவிதமாய் இருக்குமேயன்றி இத்தனை வேறுபாட்டை அடையாதே.

பி. நல்லது தம்பி சரிதான், போய்வாரும் பின்னொருவேளை கண்டுபேசிக்கொள்வோம்.

மா. ஐயரவர்கள் போக நானும் பின்னை நிற்கிறேன்.

---

## கடிதங்கள்.

### இந்துமத வேடக்தலைவு—Hinduism Unmasked.

(Translation of the article in English in No. 20-)

(*Erratum. In the 20th No. in a note in the 243d page, a Yojana is said to be equal to 182 miles. It should be 18 2-11 miles.*)

(மகாமேரு சூனியப்போருள்.)

கந்தப்புராணம்—அண்டகோசப்படலம்.

"சம்புத்தீவுக்கு மத்தியத்திலே மகாமேரு பருவதந் தாமரைக்காய்போல நிற்கும். அதினுயரம் (௮௪௲) யோசனை பூமிக்குள்ளே தாழ்ந்த அளவு (௰௬௲) யோசனை. மேலகலம் (௩௨௲) அடியகலம் (௰௬௲) யொசனையுண்டு. அதற்கு மூன்று மேகலையுண்டு, மூன்றிலும், மேல்மேகலையில் பற்பல கொடுமுடிகள்காணும். மகாமேருவின்மேலே துருவன் நின்று சூரியன் சந்திரன் நட்சத்திரங்களைச் சுற்றியோடப்பண்ணுகிறான்.

மகாமேருமலையுமதற்குச்சேர்ந்த பொருள்களும் அநேக புராணங்களின் பொறுப்பான அபிப்பிராயமாயிருக்கின்றது. ஒருமுறை இரண்டுபொய்யர் ஆளுக்கொவ்வொருபொய் சொல்லவும் அதிலார் வலுபொய் சொல்லக்கூடுமென்று பார்க்கும்படி சபதம்பண்ணிக்கொண்டார்களாம். அவர்களிலொருவன் தான் சந்திரனிலே ஒரு ஆணி அடித்திருக்கினேனென்றான். மற்றவனோ அந்த ஆணியடித்திருக்கப்பட்டபொழுது அங்கேபோய் மற்றப்பக்கத்தினின்று அத்தையிழுத்துப் பிடுங்கிப்போட்டேனென்றான். மகாமேருவைப்பற்றிக் கட்டினவர்கள் காலத்தில் இப்பெயர்ப்பட்ட பொய்யரிருந்தார்களேயானால் அவர்கள் பொய்க்கட்டுக்கட்டுவதற்குக்கொண்டிருந்த ஆளமானவிவேகத்தைப்பார்க்கிறபொழுது இந்தப்பொய்யர் அவர்களிடத்திலே படித்துக்கொள்ள மெத்தவிரும்புவார்களென்று காணப்படும். மகாமேருவைப்பற்றிய பொய்யுடனே முந்தின இரண்டு பொய்களையுமொத்துப்பார்த்தால் அவையொன்றும்பெறு. இதைப் பின்னுற்காட்டுவேன்.

மகாமேருமலை அசுபாவமாகத் தலைகீழாய் நிற்கிறதாகவும், வழமையான பதார்த்தங் கூடியதாயிராமல், சுத்தத் தங்கமலையாயிருப்பதாகக் காட்டப்பட்டிருக்கின்றது. அதினுயரம் (௰௫ இல. உ௭௲௨௱௰௰) இதைப் பூமியின் சரியான அளவோடேயொப்பிடுப்பொழுது இது அதின் குறுக்களவைப்பார்க்க, (௱௬) மடங்குபெரிதாயிருக்கிறது. பின்னை இப்படிப்பட்ட ஒரு பெரியமலை பூமியின்மேலிருப்பதென்பது என்னத்திற்குச் சமானமாயிருக்குதென்கில், ஒருபெரிய பனையானது ஒருபனம்பழத்தின்மேல் நிற்பதுபோலாமே. ஆனால் இம்மலை தலைகீழாய் நிற்கிறசாயலாயும் அதினகலம் (௫௰இல. அ௪௲அ௱௰அ) மயிலாகவுங் காட்டப்பட்டிருப்பதினாலும், மேலே சப்பையான ஒரம் பூமியைப்பறந்து நிழலிட்டுப் பூமியின் புறவட்டவெல்லைக்கப்பால் (உஇல. அசுஅகூ௱கூ) மயில் தூரத்துக்குச் சுற்றிலும் விசாலித்திருக்கும். இது என்போலிருக்குதென்றால், ஒருபெரிய குடையை ஒரு சிறுகடுகுவிரைமறைப்பதுபோலாமே. மறுபடி, அம்மலையினடிபாரத்தினது குறுக்களவு (உஇல. கூ௰௲கூ௱கூ) மயிலாயும், பூமிக்குக்கீழ் அதின் தாழ்வுமவ்வளவாயிருப்பதினாலும் இவ்வளவு பிரமாண்ட மலை நிற்பதற்குப் பூமி மெத்தச் சிறிதாயிருக்கின்றது. சத்ததிவு சமுத்திரங்களைப்பற்றிப் புராணங்களிற் செல்லியிருக்கிற முறைச்கிசைய இலங்கையினிலையைச் சரிப்பிடிக்கும்படியான யாதொரு இந்துவுமில்லை. அது சம்புத்திவுக்கு உள்ளிலோ? வெளியிலே? நியாயத்தளவுக்குச் சம்புத்தீவின் மத்தியிலென்று வைத்துக்கொள்வோம். பின்னை, புராணத்திற் கூறியபடி, பூமி தட்டையாயும், இலங்கை மகாமேரு கிரிக்குத்தெற்கே (௫௰௲) யோசனை தூரத்திலும், மலையினதுயரம் (௮௪௲) யோசனையாயுமிருப்பதினால், எங்கட்கம்மலை முக்கோணசாஸ்தர விதிப்படி (௯௰) பாகை உயரத்திற்றெரியவேண்டுமே. அது காரியத்தை மெத்த இட்டமாயெடுத்துப் பார்ப்போம் எப்படியெனில், இலங்கைத்திவு சம்புத்திவின் அந்தத்தில் அதாவது, (௧இல. யோசனை) தூரத்திலிருக்கிறதாய் வைத்துப் பார்ப்போம். அப்போதானும் எங்களுக்கு (௪௰) பாகை உயரத்திற்றெரியவேண்டும். இது நிசச்செய்தியோ? அப்படிப்பட்ட மலையெங்கள் கண்ணுக்குத் தெரிகின்றதோ? ஏறோப்பையருடை சாஸ்திரங்களிற் பயிற்சியில்லாதிருந்தும், முக்கோணசாஸ்திர விதியையறிந்த ஒரு இந்துவுக்கு நான்சொன்ன நியாயங்கள் போதும். மகாமேருமலை இல்லையென்பதற்குப் போதிய நியாயஞ்சொன்னமையால் இனியடுத்த பொருள்களைப்பற்றிச் சொலலத்தேவையில்லை. பிராமணன்போனாற் பின்குடுமிக்காவந்தது சாஸ்திரம். என்றபழமொழிபோல, மலையெடுபட்டுப்போனால் அதைப்பற்றிய பொருள்களை நமது அஞ்ஞானச் சினேகிதர் ஒரு பொருட்டாயெண்ணார்களென்று நினைக்கிறேன்.

ஆனபடியால், மேருகிரியென்பது அத்தைக்கட்டின புலவனுடைய மதிமயங்கினவேளையில், அவனுடைய மூளையிலேபடிந்த எழுந்தமான எண்ணத்திலேமாத்திரம பொருளாயிருந்த வீணெண்ணப்படைப்பாயும், விழித்திருக்கக்கண்ட கனவின் நிழலும், எண்ணப்படைப்பாயுமிருப்பதுமன்றி அது பலயோசனைக் கணக்கான பருப்பமுள்ளதாயிருந்தாலும், வெறுவெளியிலுங் குறைந்த உணர்ச்சிக்கடலுயும் கண்டிப்பில்லாத அணுவிலுங்குறைய நிலுக்கின்றதுமாயிருக்கின்றது.

கடைசியாக, எனதருமையான இந்துச் சகோதரரே, இந்தக்

காரியத்தைப் பார்க்குமளவில், காந்தப்புராணத்தைத் தேவவெளி
ப்படுத்தலாகவும் மகாமேருகிரியை எடுத்துச்சொல்லுகில் இந்தும
தத்தை நரருடைய ஆத்தும ரட்சிப்புக்காகக் கருத்தாவால் அருள
ப்பட்ட மார்க்கமாகவும் ஏற்றுக்கொள்வோமோ? தங்கள் பின்ன
டியாருக்கு இவர்களிவ்விதமான பொய்க்கட்டைக் கட்டினதில் எ
வ்வளவு தீட்புஞ் சீர்கேடும் உறுதியற்ற விதயமுள்ளவர்களுமாயிரு
ந்தார்கள். ஆன்மாவின் இரட்சிப்பு அல்லது அதின் அழிவு பொ
றுத்திருக்கின்ற மகாபிரதான காரியத்தை அதுபற்றியதாக இரு
க்கக் காண்கிறபொழுது எவ்வளவு நரகத்தைப் பொருந்தியதாயி
ருக்கின்றது. சத்தியமானது செந்தளிப்பும், உயிர்ப்பிக்கிறதுமா
ன கிரணத்துடனே எங்களிற் பிரகாசிக்கிறபொழுது அதை நோக்
காமற் பின்வாங்கலாமா? வெளிச்சத்திற்கு வருவதைப்பார்க்க நம
து சாதியாரிருளைச் சினேகித்து அதையதிகமாகத் தெரிந்துகொள்
வதென்ன முகாந்திரம்? தமது நற்சங்கதிகளை நமது இருணிறைந்
த பூமிக்கனுப்பின கர்த்தர் ஆசீர்வதிக்கப்படுவாராக. அந்தமே
ன்மையான புத்தகமாகிய விவிலி என்னுமாகமம் எங்கள் பாதைக்
கொரு வெளிச்சமும் எங்கள்பாதத்துக்கொரு விளக்குமாயிருக்கக்
கடவது. அதிற் சொல்லப்பட்டிருக்கிற இரட்சகர், நாம் கிருபை
க்கும் அழியாமைக்கும் பங்காளிகளாயிருக்கும்படி தமது மகிமை
யோடே வெளிப்படுவாராக

---

உதயதாரகைப் பத்திராதியவர்களுக்கு வந்தனம்.

உலோகாதியெங்குஞ் செல்லுஞ் சுலோகதித்தபத்திரிகையிடத்
திற் போய் இலக்கணவிலக்கிய ஆராச்சியாரவர்களுக்குச் சலாஞ்
சொல்லச்சொல்வி உங்கள் உதயதாரகைக்குச் சொல்லுங்கள்.
மானிப்பாயில் அச்சுப்பதிப்பித்த பெயரகராதி தமிழ் நன்குண
ராத பாலகருக்கும் இயற்றமிழ் வழக்கறியாத பிறபாஷைக்கார
ர்க்கும் வேண்டிய அவசரமென்று கண்டு செய்யப்பட்டதேயன்
றி மற்றொருமுகாந்தரமல்ல அதை அவ்வகராதியின் முகவுரையிற்
காணலாம். அப்படியிருக்க இலக்கணவிலக்கிய ஆராச்சியார் ந
ம்மேற் குற்றஞ் சுமர்த்தவும் அவ்வகராதிக்குச் சங்கையீனத்தை
யுண்டாக்கவும் விரும்பி உதயாதித்தன், சூயம். புறத்திற் சிலகாரிய
த்தை எழுதினதாகத் தோற்றுகின்றது. இப்படி அவரெழுதினது
அவ்வகராதியின் முகவுரையைத் தெளிந்தறியாமையினாலென வி
ளங்குகின்றது. இதுநிற்க இப்படி இகழ்ச்சிபண்ணவேண்டுமெ
ன்ற நோக்கமில்லாமல் அவற்றுட் காண்கிற தவறுகளையும் அவ
ற்றுட்சேர்க்கவேண்டிய சொற்களையும் தள்ளவேண்டிய சொற்க
ளையும் இவ்வுதயதாரகைவழியாய் யாரேனுந் தெரியப்படுத்தினால்
அவைகளை மிகுந்த வணக்கத்துடனேற்றுக்கொள்ளுவோம். இது
வல்லாமல் இப்பொழுது தொகையகராதியொன்று சேர்க்கும்ப
டி எண்ணியிருக்கிறோம். அதற்குதவியாய்ச் சதுரகராதியிலும்
நாங்கள் சேர்த்திருக்கிற அகராதியிலும் பஞ்சவிலக்கணங்களிலு
ம் உறெற்றிலர்செய்த அகராதியிலுங்காணப்படாத தொகைச்
சொற்களையும் அவற்றிற்குப் பொருள்களையும் விரிவாகவும் விளக்க
மாகவுமெழுதி உதயதாரகை வழியாய் அனுப்பினால் எங்கள் சிற்
றுபகாரத்தை வாங்கத்தக்கவர்களுக்கு (ா) தொகைச் சொற்களு
க்கு (௲) சிலிங்கு வீதங்கொடுப்போம். கல்வியிலுஞ் செல்வத்தி
லுந் தயாளத்திலும் அதிகப்பட்ட பிரபுக்களாகிய புலவர்க்கு
நாமும் வந்தனஞ்சொல்வி நமதுபிரணணியாருட் அவர்களைப்போ
ற்றிக்கொள்ளத்தக்கதாய் அவாகள் நாமமும அவ்வகராதியிற்பதி
க்கப்படும். இதுகாரியதைக் கனம்பொருந்தி ஆராச்சியாருக்கும்
அறிவிக்கக்கட்டளைபண்ணுங்கள். இப்படிக்கு.

உங்கள் தாழ்மையான (Nathaniel)
அம்பலவாணர் சந்திரசேகரன்.

---

உதயதாரகையின் எடிற்றவர்களுக்கு வந்தனம்,

தங்கள் பத்திரிகையிலே பிறரை நகைத்து ஏசிப்பேசி அல்லது
இங்கிலைஷபண்ணி எழுதி அனுப்பிப் பிரசுரஞ்செய்யச் சொல்விக்
கேட்டால் அத்தைப்பிரசுரஞ்செய்யமாட்டோமென்றும், நன்மை
யானதும் பொதுவான அலலது எவாகட்கும் நியாயமான கார
ணத்தை எழுதி அனுபவித்தத்தைப் பிரசுரஞ்செய்யச் சொல்விக்
கேட்டால் அப்பேர்ப்பட்டசெய்கை தடையின்றிப் பிரசுரஞ்செ
ய்வோமென்றும் நியாயமானசெய்கை அல்லது காரியஞ் சிறுபா
லகனிடத்திலாவது படிக்கவேண்டுமென்றுந் தங்கள் இவ்வருடப்
பத்திரிகைகளில் ஒன்றிற்பிரசித்தம்பண்ணியிருந்ததை மிகவுஞ்சரி
தானென்றேர்த்து இவ்விடத்துச் சொப்ஸகிறைவராகிய நாங்கள்
(௬) பெயரும் மிகவே சந்தோஷங் கூறினோம்.

ஆனதினால் எனதுபேரிற் தயவுவைத்து இதின் பின்னால்வரைந்த
னுப்புகிற தேவ ஆகமக்கருத்தை ஆருக்கும் பொதுவாகவும் நி
யாயமாகவும் விளம்பி அறியவேண்டியிருப்பதினாற் தங்கள் தார
கையிற் சொல்வியிருக்கும் பொருத்தம்போல இத்தைத் தடையி
ன்றிக் காகிதப்பிரத்தியுத்தரமாய்க் கழித்துவிடாமல் இதினடுத்
துவருஞ் சஞ்சிகையினோர்மூலையிற் பிரசித்தஞ் செய்தனுப்பும்படி
மிகவே கேட்கிறேன். அதாவது, தங்களின் வேதாகமப் புத்தக
த்தை யான்வாசித்து விளங்கும்போது அதில் அநேகசமுச்சயங்
கள் தோன்றுகிறபடியால் அவைகளிலொன்றைமாத்திரம் விருப்
பமாயெழுதி அறியும்படிக் கவசரமானவனாகயிருக்கிறேன். அதா
வது, மத்தேசுவுடைய சுவிசேஷத்தின், ௰௮. அதி, ௰௮. சுலோ.
காணப்படுகிற பிரகாரம் பூமியிலே நீங்கள் எவைகளைக்கட்டுவீர்க
ளோ அவைகள் பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும். பூமியி
லே நீங்கள் எவைகளையவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்தி
லே அவிழ்க்கப்பட்டிருக்குமென்று மெய்யாய் உங்களுக்குச் சொ
ல்லுகிறேனென்ற வாக்கியங் கிறிஸ்துநாதர் அப்போஸ்தலமாருக்
குங் குருப்பிரதானிமாருக்குங்கொடுத்திருக்கிற இந்தப் பெலப்பா
ன தத்துவத்தினால் உரோமான்மார்க்கக் கத்தொலிக்கவென்றழை
க்கப்படுகிற மெய்யானதிருச்சபையிலுட்பட்டிருக்கிற குருக்கள்
கிறிஸ்தவர்களை நடப்பிக்கும் விதமும் அவர்கள் நடக்கும் விதமும்
மேற்குறித்த கட்டளைக்குச் சரிதானென்றெனது சிற்றறிவுக்குத்
தெளிவுகரமாய் விளங்கிவருகின்றன. ஆகையால் இப்போதகந்
தங்கள் வேதாகமப் புத்தகத்திலேதானேயிருக்கிறதை நன்குயறி
ந்தும் எங்கள் நாயக இயேசுக்கிறிஸ்துநாதருடைய வாக்கியம்
போலத் தாங்கள் நடவாததினால் எனக்குமிகுந்தமலைவை உண்டா
க்குகின்றன. அதினால் இப்போதகத்தைக் கைக்கொள்ளுகிற முகா
மைத்துரைகளவர்கள், ("தீமோத்தேயு. ௨டு, ௬") காணப்படு
கிறபிரகாரம் எதிர்பேசுகிறவர்களுக்குச் சாந்தமாய்ப் புத்திசொ
ல்லவேண்டுமே, என்றிருப்பதினால அந்த வேற்றுமையில்லாமல்த்
தயவுபண்ணி இந்தமலைவைவிளங்கி அறிகிறது நலமும் எவர்கட்கு
ம் நியாயமுமாயிருப்பதினாலும் இதிற்குடைத்தான நேர்மறுமொ
ழி எழுதித்தெளிவிக்கும்படி மிகவும்விருப்பமாய்க் கேட்டுக்கொள்
ளுகிறேன். இப்படிக்கு

நீர்கொழும்பில். ௲௮௱௬௰௮
கார்த்திகை, ௴ ௧ தி. இதின்விருப்பமுள்ள
ஓசுபஸகிறேவரான,
M. A De Tylvan.

## பத்திராதிபர் குறிப்பு.

மத்தேயு. (௰௮. அதிகாரம். ௰௮. ம) வசனத்திற் காண்கிறபடி
"பூமியிலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோ
கத்திலே கட்டப்பட்டிருக்கும் பூமியிலே எவைகளை அவிழ்ப்பீர்க
ளோ அவைகள் பரலோகத்திலே அவிழ்க்கப்பட்டிருக்குமென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"என்று கிறிஸ்துநாத
ர் சொன்ன வசனத்துக்கு நாங்கள்பண்ணும் அருத்தம் எவ்விதம்
என்பதை அறியும்படி இவர் விரும்புகிறார். இதற்குமுந்தின வசன
ங்களிலே கிறிஸ்தவனுக்கடாதவிதமாய் நடந்துவந்த ஒரு சகோ
தரனை நடத்துமவ்தம் எவ்விதமெனக் கிறிஸ்துநாதா தமது சீஷ
ருக்குச் சொல்விக்காட்டினார். அவன் சபையிலிருந்து தள்ளப்பட்
டு அல்லது அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும்
எண்ணப்படமுன்னமே குற்றஞ்செய்த சகோதரனுடனே நடந்
துகொள்ளுமொழுங்கைக்காட்டிக், கட்டும்போதாகுதல் அலலது
அவிழ்க்கும்போதாகுல் நாம் சொன்ன கட்டளைப்பிரகாரஞ் செய்
யவேண்டுமெனறு கிறிஸ்துநாதர் சொல்லப்போகிறார். அப்படிக்
கட்டுகிறது அலலது அவிழ்க்கிறது பரமண்டலத்திலேயும் ஸ்திரப்
படவேண்டியது. "கட்டுகிறது அல்லது அவிழ்க்கிறது" என்பது
தடைபண்ணுகிறது அல்லது உத்தரவளிக்கிறது என்றருத்தமாம்.
மறுவிதமாய்ச் சொலலுகில் அவர்களிப்படிப்பட்ட காரியத்தில்
தேவதத்துவத்தையும், தேவ அத்தாட்சியையும் பெற்றுக்கொண்
டு அவர்கள் செய்கிறவைகளெலலாம் ஆண்டவனுக்குச் சந்தோஷ
மாயுங் காணவேண்டியது. அப்போஸ்தலர் பலகாரியங்களிலும்
பலசமயங்களிலுஞ் செய்ததுஞ்சொன்னதுமான காரியங்களுக்கு
ச் சிலபேர் இந்தவசனத்தை மோசமாய்ப் பொருத்தி ஓட்டிக்
கொள்ளுகிறார்கள், ஆகையால் இந்த வசனமாவது சபைக்காரிய
ங்களிற் குற்றஞ்செய்தவர்களை நடத்தும் விதம் எப்படியென்றே
காட்டுகின்றது. மேற்காட்டிய கடிதமெழுதினவரும் இன்னும்ப
லரும் இந்தவசனம் பாப்புமாருக்கும் விஸபுமாருக்கு முரித்தான

தென்றும் அவர்களுக்குத்தானே இந்தக்கட்டளை அளித்திருக்கிறதென்றும் முழுமோசமாய்ச் சொல்லுகிறார்கள். இந்த வெண்ணத்துக்காதரவாக எவ்வளவென்கிலுமத்தாட்சியில்லையென்பதற்கு தாரணமாகப் பவுல் அப்போஸ்தலன் விவாககாரியத்தைப்பற்றிக, கொரிந்தியர் (எ) அதிகாரம் (சு) வசனத்திற் சொல்லுகிறதென்னவென்றால் "இதை நான் கட்டளையாகவல்ல உத்தாரமாகவே சொல்லுகிறேன்" இன்னும் அந்த அதிகாரத்திற் பத்தாம் வசனத்திற் சொல்லுகிறதாவது "விவாகம்பண்ணுகிறவர்களுக்கு நானல்ல கத்தர் கட்டளையிடுகிறதென்னவெனில்" இன்னும் பன்னிரண்டாம் வசனத்திலே "மற்றவர்களுக்குக் கருத்தரால் நான் சொல்லுகிறதாவது" இவைகளால் நாமறிகிறதென்னவென்றால் பவுல் அப்போஸ்தலன் சில காரியங்களிற் பராபரனுடைய உத்தரவைக் கொண்டு பேசினாரென்றுஞ் சிலகாரியங்களிலேயோ உத்தரவின்றிப் பேசினாரென்றும் இன்னும் அவருடைய எண்ணம்போலே பராபரன் செய்யச்சொல்லிக் கட்டளையிட்டதற்கும் தாமே மனிதனடைவாகப் புத்திசொன்னதற்குமுண்டான ஒரு பெரிய வித்தியாசத்தைக்காட்டுகிறது அவசரமாயுமிருந்தது இன்னும் அப்போஸ்தலர் எக்காரியங்களிலும், எச்சமயங்களிலும் தவறுள்ளவர்ளாயிருந்ததினால் அவர்கள் தங்கடங்களெண்ணத்திலெ ருவர்க்கொருவர் வித்தியாசப்பட்டிருந்தார்களென்பதை அப்போஸ்தலர், (யரு,ம்)அதிகாரத்தினால் அத்தாட்சிபண்ணலாம், எப்படியெனில், புறச்சாதியாரிற் குணப்பட்டவர்களைப்பற்றி ஒரு பெரிய வாக்குவாதமுண்டானபோது யாக்கோபென்பவருடைய எண்ணமே பேதுருவினுடைய எண்ணத்திலுமேற்பட்டதாயிருந்தது இதற்காதரவாகக்கலாத்தியர் (உ, அதிகாரம்,யக, ம்)வசனத்திலே பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதாவது, "பேதுரு அந்தியோகியாவூருக்குவந்தபொழுது அவன் தப்பிதஞ்செய்ததினாலே நான் முகமுகமாய் அவனோடெதிர்த்தேன்.

மேற்சொல்லிய காரியங்களினாலே பாப்பானவர் தவறுள்ளவரென்றும், மனிதருடைய பாவங்களை மன்னிக்கிறதற்குக் குருக்கள்மாருக்கும்விஸப்புமாருக்கு முத்தரவளிக்கவில்லையென்றும்அறியலாம், ஓயேசுக்கிறிஸ்துநாதர் தாமே பாவமன்னிப்படையும் வழிவகைகளைக்காட்டியிருக்கிறார், அவைகளை மாற்றத்தக்க தத்துவமவானத்திலாகுதல் பூமியிலாகுதலில்லை. இவ்வழிவகைகள் பாவத்தை விட்டு மனந்திருப்புதலும் பராபரனுடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துநாதரிலே கொள்ளும் விசுவாசமுமே. லூக்கா. (உச அதிகாரம்.) வசனங்களைப்பார்க்கவும்.

பாப்புமார்களும், விஸபுமார்களும் குருக்கள்மார்களும் இவ்வொழுங்கைத் தங்களுடனொத்த சனங்களுக்கறிவித்துக் கிறிஸ்துவினாமத்தினாலே தங்கள் பாவங்களைவிட்டு உண்மையாய் மனந்திரும்பிக் கிறிஸ்துநாதர் தாமே தங்கள் இரட்சகரென நம்பி விசுவாசிக்கிறவர்களுக்குப் பர்வமன்னிப்புக் கொடுக்கப்பட்டிருக்குதென்று சனங்களுக்கு நிச்சயப்படுத்தலாம். ஆனாலும், பாப்புமாருக்காகுதல், அல்லது குருக்கள்மாருக்காகுதல, அல்லது அப்போஸ்தலர்களுக்காகுல் சத்தியத்தை அறிகிறதற்குப் பரிசுத்தாவியின் அருள் கிடைத்தாலொழிய யாதொருகாரியத்திலெங்கிலும் குணப்படுதலுண்மையென்றும், விசுவாசம் நல்லதென்றும், பாவமன்னிப்பு நிச்சயமென்றுஞ் சொல்லத்தக்கவையாக மனிதருடைய இருதயங்களின் இரகசியங்களைப் பற்றி வகையறுக்கிறதற்குச் சற்றெங்கிலும் போதியவர்களல்ல. அப்படிப்போதியவர்களென்றுமனிதராகுதலசொன்னால் அவர்கள் கபடமுள்ளவர்களுஞ் சுத்தமற்றவர்களும், துற்குணமுள்ளவர்களும இரத்தப்பிரியருமாயிருக்கிறதைக் காணும்பொழுது அவர்களுடைய அசத்தியத்தை வெளியிற் காட்டுகிறதற்கும்வேறு நியாயந் தேவையில்லாததாகப் பொதுச் சனங்களுடைய பார்வைக்குச் சிரிப்புக்கிடமாயும் அவபத்தி நிறைந்ததுமாயுமிருக்கின்றது. ஆகையால அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். மத்தேயு. எ, அத்,உய, வசனம்.

---

[Translation of the above]

MESSRS. EDITORS,

We are very glad to read in one of your Papers "that we shall in no instance knowingly publish aught that is detractive or slanderous, either of the persons or opinions of our fellow men, and in another paper you said that if we will, "we may learn even from *children.*"

Please have the goodness to publish the following, and explain it according to your promise.

When I read your Bible and consider it, many doubts arise. Please let me know your views of the meaning of the verse, in Matthew xviii. 18. "Verily I say unto you, Whatsoever ye shall bind on earth, shall be bound in heaven, and whatsoever ye shall loose on earth, shall be loosed in heaven." It seems plain to my poor knowledge that the priests of the true Catholic church exercise the authority here given by Christ to apostles and bishops, and thus know how to conduct towards their Christians. Though you know very well that this authority is given in *your* Bible, yet I do not see you walk according to it; therefore a doubt has arisen in my mind; but you Messrs. Editors who obey the requirement of the Bible, according to Timothy "the servant of the Lord must not strive, but be gentle unto all men, apt to teach, patient, in meekness instructing those that oppose themselves" will I hope be able to remove the doubt.

Negombo 1st. November, 1842. Your's &c.

M. A. DE TYLVAN,
*A. Subscriber.*

*Reply to the above.*

Our correspondent wishes to know what interpretation we put on the words of Christ in Matthew xviii. 18. "Whatsoever ye shall bind on earth shall be bound in heaven, and whatsoever ye shall loose on earth shall be loosed in heaven."

Christ had in the context of this passage spoken to the disciples on the method of dealing with a brother who had given offence by his unchristian conduct. He had detailed the regular steps to be taken with an offending brother before he should be finally rejected from the church, and regarded "as a heathen man, and a publican," and then proceeds to say, that whatsoever they should do in conformity with the rules he had given,—either to *bind* or to *loose*, (which means, to prohibit or to permit,) should be ratified in heaven. In other words, they should receive in these matters *divine direction* and *divine authority*, so that whatever they should do would be agreeable to the divine pleasure.

This text has been misapplied by some to whatever the apostles did or said in respect to *all matters* and *on all occasions*—whereas the text relates only to the *affairs of the church in matters of discipline.* Again it has been grossly misapplied by others, as is seen in the communication of our correspondent, to popes and bishops, as if this power had been given to them—whereas there is nothing in the Scriptures which authorizes such an opinion, and therefore we should not believe it. Paul admits in 1. Cor. vii. 6. when speaking on the subject of marriage, that what he says is by *permission* and not by *commandment*; and again in the 10th verse, he says "unto the married I command, yet not I but *the Lord*," and again in the 1st verse of the same chapter; "But to the rest speak *I*, not *the Lord*;" which plainly show that on some points he spoke with the *authority of God*, and on others he did not, and that it was important, in his view, to preserve a broad distinction between what *God had commanded* and what *he*, as a man, *advised*. That the apostles were not at *all times* and on *all occasions* under infallible direction is also proved by the fact that they sometimes differed in opinion from each other. See Acts xv. where it is said by the sacred writer "there was much disputing amongst the apostles and elders," on the question as to what ought to be required of the gentile converts, and in this debate the opinion of James prevailed over that of Peter. See also Galatians ii. 11 where Paul says "when Peter was come to Antioch, I withstood him to the face, because he was to be *blamed.*"

The above remarks apply equally against the notion of the Pope's infallibility, and the power of priests and bishops to remit the sins of men. Jesus Christ has given the terms on which forgiveness may be received, and there is no power on earth or in heaven that can alter them. These terms are repentance of sin, and faith in Jesus Christ, as the Lamb of God. See Luke xxiv. 45, 46, 47.

Popes and bishops and priests may proclaim these terms to their fellow men, and assure them, in the name of Christ, that free forgiveness will be granted to all who sincerely repent of their sins, and believe or confide in Jesus Christ as their saviour. But neither popes, nor priests, nor apostles can judge of the secrets of the heart so as to say in any particular case that the repentance is sincere—the faith genuine—the forgiveness certain, *unless* they are *inspired of God* to know the fact—a pretension which when set

up by men whose conduct has in many cases been marked by deceit, impurity, violence and blood, is sufficiently ridiculous and impious in the sight of common men to need no argument to prove its falsity. "Wherefore by their fruits ye shall know them." Matthew. vii. 20.—See the article in our last No. entitled "morals of Popery before the Reformation."

---

முகாமைக்காரரே,

தாங்கள் நேசம்வைத்து நான் வரவிடுத்த கடிதம் பிரசுரஞ்செய்ததற்கு மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இந்தமீ ௨௨தீ சனிக்கிழமை சாயந்தரம் சுபதினமாகையால் என் முற்கடிதத்திற் குறித்த பள்ளிக்கூடம் ஆரம்பிற்றாயிற்று. ஆகமசாஸ்திரங்கள் படிப்பிக்கத்தகுந்த உவாத்தி இவ்வூரிலகப்படாதபடியால் வடதேசத்துக்கெழுதியழைப்பிக்க நினைத்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இலக்கணவிலக்கியம் படிப்பிக்கிறதற்கு வட்டுநகர் சாஸ்திரப்பள்ளிக்கூடத்து முன்னுவாத்தியாராயிருந்த றி. றி. சண்முகச்சட்டம்பியாரை நியமித்திருக்கிறது. இதுநிற்க என் கடிதத்திற்கு நீங்கள் பண்ணின குறிப்பைப்பற்றி அவர்கள் மிகவும் நாணி வெட்கமடைந்து "வார்த்தைக்குச்சூத்தையோ" என்ற பழமொழிப்படி நீங்களும் நம் மதத்தைப் பிராமணர் எடுத்துத் தொடுத்த மதமென்றும் இப்படியே நாங்களேதும் மதவிஷயத்தைப் பற்றி உங்களுக்கெழுதினால் அத்தைப் பிரசுரஞ்செய்யாமல் விடுகிறதுமன்றி அது கிடைத்ததென்றென்கிலும் மறு உத்தாரத்திற் காட்டுகிறதுமில்லையென்றும், நாங்களுங்களோடே சருவாமலிருக்க நீங்கள் நம் மதத்தை வெகுதூரம் அவதூறு செய்கிறீர்களென்றும், வெகுதூரம் விசாரப்பட்டுத் தனித்து நெடுநேரமாக அன்றைப் பிற்றினம வைத்தியலிங்கச் செட்டியாரும், முத்துவேலுச் செட்டியாரும், இரகுநாதமுதலியாரும், இவர்கள் குருவாகிய அருணாசலக்குருக்கள், அல்லது வேதக்குட்டி ஐயரென்றவருமாகச் சமபாஷித்தார்கள். முதல்முறை கூடின கூட்டத்தில் தம்பிப்பிள்ளை உதாரணமாய் எடுத்துப் பேசின எலிக்கூட்டத்தின் கதையை வேதக்குட்டி ஐயரும்பற்றிப் பேசிப் பின்பு இந்தப் பாதிரிமார் நம்மதத்தைப் பழிக்கும் வாயையடைக்க நாங்களுமொரு அச்சுக்கூடமிஸ்தாபித்து அவர்களைப்போல் (அவர்கள் மதகுற்றத்தைக் காட்டி) நாங்களுஞ் சிறு புத்தகங்களை அடித்துப் பரம்பப்பண்ணவேணுமென்றுமயோசித்தபோது முத்துவேலுச்செட்டியார்சொன்னதாவது, இவ்வூர் வெள்ளைக்காரரும் அச்சுக்கூடத்துக்குப் பங்காகவரப் பலமுறை முயன்றிருக்கிறபடியினாலும் அதன் செலவைப்பற்றி நானுஞ் சீமைக்கு எழுதியிருப்பதினாலும் மேற்குறித்த வெள்ளைக்காரரிடம் பேசிக்கொண்டு அச்சுக்கூடம் அழைப்பிக்கிறேனென்று சொல்லியிருக்கிறார். மூன்றுமுறை கூடின இந்தக் கூட்டம் ரகசியமாயிருந்தாலும் வேதக்குட்டி ஐயர் சைவமதத்தின் நலப்பைப்பற்றி வெகுவாய்ப்பேசி அவர்களுக்குச் சுவைகொடுத்து வாலையுருவியிருக்கிறார் ஆகையால நீங்களினிமேல் சைவமதத்தார்க்கென்கிலும், பிராமணர்க்கென்கிலும் நிந்தையாய் எழுதாமல எச்சரிக்கையாயிருக்கும்படி கேட்டு நிற்கிறவனாகிய உமதூழியன்

ஆ. சிவப்பிரகாசன்.

மேலும் குட்டிப்பிள்ளையென்பவரும் இங்கிலிஸ் தமிழ் இவை இரண்டு பள்ளிக்கூடம்போட வெண்ணியிருக்கிறாராம். எனனிந்தக் கடிதத்தையும பிரசுரஞ்செய்யக் கேட்கிறேன.

---

## பத்திராதிபர் குறிப்பு.

மேலேகையொப்பமிட்டிருக்கிற சிவப்பிரகாசனென்பேர் தரிக்கப்பட்டவராரென்றும், அவர் இப்பொழுது சைவ சமய வளர்ச்சிக்காக வைக்கப்பட்டிருக்கிற கல்விச் சாலைக்கு முதற் பேராயிருக்கிறவர்களுடைய கேள்வியின் பேரால் இக்கடிதத்தை வரைந்து விடுத்தாரோவென்றும் நாங்கள் அறிய விரும்புகிறோம். என்னத்தினாலெனில், இனிமேல் அத்தை எழுதினவர் சிவப்பிரகாசமல்லவென்று அறியவந்தால் அவர் எழுதின காரியத்தை அக்கல்விச் சாலைக்குடன்பட்டிருக்கிறவர்கள்தானே இல்லையென்று சொல்லவேதுவாய் இருப்பது மாத்திரமல்ல, அதைப் பற்றித் தாரகையில் வாசித்தவர்களும் அனுப்பப்பட்டுப்போவார்களென்று நாங்கள் பயப்படவேண்டியிருக்கிறபடியினாற்றான்; ஆகையினாலே அவர்கள் வைத்த சங்கத்துக்குத் தலைவனாரென்றும், அதற்குப் பொக்கிஷக்காரன் சக்கிடுத்தார் முதலிய உத்தியோகத்தராரென்றும், அதற்கென்று கொடுத்த பணம் எவ்வளவென்றும், அதற்குக் கையொப்பக்காரரெவரென்றும், அச்சங்கத்தையும் கல்விச் சாலையையும் நடத்திப் பராபரிக்கும்பொருட்டு அவர்கள் நிருபித்த கட்டளைச் சட்டம் எவ்விதமென்றுஞ் சிவப்பிரகாசமல்லது வேறெவராகுதல் தயவுபண்ணி எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படியே எழுதி அனுப்புவதை வாசிக்கிற தாரகைக்காரர் சந்தோஷப்படுவது மாத்திரமல்ல சிவப்பிரகாசத்துடைய பொய்யும் மெய்யும் அத்தோடே வெளித்துப்போம்: சிவப்பிரகாசத்துடைய கடிதத்தின் தோரணியைப் பற்றி நாங்கள் சில கவனிப்புப்பண்ணவேண்டியிருக்கின்றது. எப்படியெனில்,

மேலைச் சஞ்சிகை ஒன்றின் கண்ணே பிரசுரஞ்செய்த கடிதத்திலே கிறிஸ்து மார்க்கமானது குருமாரால் எடுத்துத் தொடுத்த மதமென்று சிவப்பிரகாசஞ்சொன்னவேளையில், என்ன அத்தாட்சியின் ஆதாரவைக்கொண்டு "சிவசமயஞ் சத்தியமென நம்புகிறீரென்றும், கிறிஸ்து மார்க்கம் குருமாரால் எடுத்துத் தொடுத்த சமயமென்பதை ரூபிக்கும்பொருட்டு உம்மிடத்தில் என்ன போதிய அத்தாட்சி உண்டென்றுஞ் சொல்லும்படி கேட்டதுமல்லாமல் கிறிஸ்து சமயம் சத்தியமுள்ளதென்றும், சைவசமயம் பிராமணர்களால் எடுத்துத் தொடுத்த அசத்திய சமயமென்றும் ரூபிக்கும் பொருட்டு நாங்களும் நியாயங் காட்டுவோமென்றுங் கூறினோம். அனைவரும் அறியவேண்டிய காரியம் இதுதான். காரியமிப்படியிருக்க, இந்தயுத்திவானும் புத்திவானுமாகிய சிவப்பிரகாசம் இது காரியம் அற்பமென்றெண்ணிவிட்டுப்போட்டுச்சிவமதத்தை நாங்கள் பழிக்கிறோமென்றுசொல்லி இதை வாசிக்கிறவர்களை மறுநோக்கத்துக்குத் திருப்பிவிடப் பிரயெத்தனப்பட்டதைப் பார்க்கும்பொழுது எங்களுக்குத் துக்கத்துக்கிடமாயிருக்கின்றது. அவரெப்படி மறு காரியத்திற் சாய்ந்து மனதுவைத்துப்போனாலும் நாங்கள் அவரை விடவேமாட்டோம். ஆகையால் இந்தப் பெரிய கேள்வியைப் பற்றி மெத்தச் சிந்தனைகொள்ளும்படி அவரை மறுபடியும் நினைப்பூட்டுகிறோம். அவர் அதைப் பற்றித் தெளிவாகவும் விளங்கத்தக்கனையாக மறுமொழி பகராதிருப்பரேல், தாரகையை வாசிப்பவர்கள் என்ன நினைப்பார்களென்றால்,—சிவப்பிரகாசனென்பவர் ஒரு சமயத்தை நம்பிவிசுவாசிக்கிறார். முதலாவது, அது உண்மையென்று போதிய சாட்சியைக்கொண்டு நிலைநிறுத்தமாட்டார். இரண்டாவது, கிறிஸ்து சமயம் பொய்ச் சமயமென்றார். அதற்குமவராலே நியாயங்கொடுக்கக்கூடாதென்றுந்தான்.

மேலும் சிவப்பிரகாசனுடைய மன்றாட்டப்படிக்கு, நாங்களினிமேற் சைவ சமயத்தைப் பற்றியும பிராமணர்களைப் பற்றியும் நகைப்புக்கிடமான காரியங்களை ஒருபோதும் பிரசுரஞ்செய்யவேமாட்டோம். அத்தை மறுவிதமாய்ச் சொல்லுகில், இனிமேல் சிவமதத்தைப் பற்றியாகுதல் பிராமணர்களைப் பற்றியாகுதல் செய்யவேணுமென்றெண்ணி மனதாரப் பொய்யான காரியங்களைப் பிரசுரஞ்செய்யவேமாட்டோம். சத்தியநெறியே அவர்களை நகைப்புக்கிடமபண்ணிற்றேயாகில், அது அவர்களுடைய பாடேயல்லாமல் எங்களுடைய பாடல்ல. யோவான். ௩ம். அதி. (௧௯, ௨௰—௨௧)ம் வசனங்களை வாசிக்கவும். உண்மையைச் செய்கிறவன் மறைந்து நில்லாமல்த் தனது விசுவாசத்தையும் மறுபேர் அறிந்து பேணும்படி வெளிச்சத்தண்டைவரப் பிரியமாயிருக்கிறான். ஆனாலும பொல்லாப்பைச் செய்கிறவனோ வெளிச்சத்தையும பகைத்துத் தன் விசுவாசத்தையும் நடையையும் மறுபேர் கண்டு நியாயமாம்படி கடிந்துகொள்ளப்பட்டு இகழ்ச்சியடையாதபடிக்கு வெளிச்சத்தண்டை வரவேமாட்டான்.

ஒருவரும் இதுகாரியத்தினுண்மையையும் நியாயத்தையும் மறுதலிக்கமாட்டார்கள். ஆருடைய நடை குற்றமாய்த்தீர்க்குமோ அவர்கள் மாத்திரமே இதுகாரியத்தினுண்மையை மறுதலிப்பார்கள். இதின் பெலனைத் தொட்டுக்கிறிஸ்து சமயம் மிகவும் தயிரியமாய் உயர்ந்த நிலையில் நிற்கின்றது. அது சத்தியத்தில் அஸ்திபாரப்பட்டிருப்பதுபோல அதிற் கூறிய போதனைகளுஞ் சத்தியமாகவே இருக்கின்றன. அது மறைந்து நிற்கப் பார்க்கிறதுமில்லை. வேடம்போட்டுக்கொள்ளுகிறதுமில்லை. அதை உலகத்திலுள்ள சகலரும் வாசித்தறிந்துகொள்ளும்படி வேதாகமத்தில் வெளியரங்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அது தன்னுடைய மாற்றாரால் வந்த எதிரித்தனத்தை எல்லாம் பறக்கடித்துப் பின்னே விடுத் தானே நிலைத்திருந்தது. வந்த எதிரிடை அனைத்தையும் வெ

ற்றிகொண்டுது. அது அசத்திய காரியமனைத்தையும் புரட்டி எழுந்து உலகம் அனைத்தையும் நீதியினாலும், சமாதானத்தினாலும், அன்பினாலும் நிரப்புகிறதற்குப் பராபரனாலே நிருபிக்கப்பட்டது. காலவியற்கை அல்லது குறிப்பைப் பார்த்தாலும் முன்னிருந்ததிலும் இப்போ கிறிஸ்து சமயந்தானே கிட்டிப் பிரபலியமான வெற்றியை அடையுமென்று காத்திருக்கிறோம்.

சிவ சமயத்தை அநுசரிக்கும் எங்கள் நேசருக்கு நாங்கள் அறிவிக்கிறதாவது, உங்கள் மதம் பராபரனிடத்தில் இருந்து வந்ததேயானால் அது நிலைத்து நிற்கும். எதிரிடை வந்தும் அதின் சத்துக் கெடவேமாட்டாது. அது சோதனைக்கெல்லாம் இடங்கொடுக்கும். அதிற் சொல்லிய போதனைகளும், முறைகளும், கற்பனைகளும் நியாய நீதிக்கும் சீவசாட்சிப் பிரமாணத்துக்கும் ஒப்பிதமாகவே இருக்கும். அது குற்றவாளிகள் பாவத்தில் இருந்தும் நரகத்தில் இருந்தும் மீட்கப்படும் விதத்தையும் வேண்டாமென்று தள்ளிக் கோபப்படுத்தின சிருட்டிகருடன் ஒப்புரவாகும் வழியையும் பற்றிப் பேசிவரும். அது மனிதரனைவர்க்கும் அறிவிக்கவும்படும். ஆகையால் பரம இரகசியங்களை அடக்கிய ஆகமம் எங்கே? இரட்சிப்பின் போதனைகளைப் படிப்பிக்கும் உவாத்தியாரெங்கே? இவ்வுண்மையை நம்பி விசுவாசித்து அங்கிகாரம் பண்ணினவர்களெங்கே? மறுபடி பிறந்து பராபரனுடன் அன்னியோன்னியசம்பந்தமாயிருக்கிறோமென்றும், மரணம்வந்தாலும்நாணமல் நித்திய சீவனின் நன்னம்பிக்கையைப் பெறுவோமென்றவர்களும்எங்கேபோய்விட்டார்கள். நாமுந்தாரகையைவாசிப்பவர்களும் அறியவேண்டியிருக்குதே. ஏனென்றால், நித்திய பலனுக்கு மரணமானது எங்களை இவ்விடம்விட்டு எடுத்துக்கொண்டு போகமுன்னமே நாங்களுஞ் சிவசமயத்தை நம்புதலினால் வரும் இரட்சிப்பென்னும் பலாபலனைப் பெறும்படியாய வழிபார்க்கவேணுமே. அது பராபரனிடத்தில் இருந்து வந்தால் கிறிஸ்து சமயமும் பொய்யாமே. எங்கள் நம்பிக்கையும் வீணும் மோசமுமாமே. வேதாகமமுந் துட்டராலோசனையினால் எடுத்துத்தொடுக்கப்பட்டதாமே. பின்னை நாங்கள் அனவாதகாலமும மோசத்தில் இறங்கி இருக்கிறோமே. இன்னும் திரும்பச் திருமபச் சொல்லுகிறோம். சிவ மதம் மெய்யானால கிறிஸ்து சமயம பொய்யே. ஏனென்றாற் பராபரனால் வந்தது நிலைக்கும். பசாசினால வந்தது விழுந்துபோகும். பின்னை மனிதர் பொயயை நிலைநிறுத்தவும சத்தியத்தை அழிக்கவும் பிரயெத்தனப்பட்டாலுங் கூடாதே.

நேசரே, இதை ஊன்றித் தியானிக்கும்படியும் உங்கள் சொய ஆலோசனையை விட்டுத் தள்ளிப் பராபரனுடைய ஆலோசனைப் பிரகாரம் நடக்கும்படியும் உங்களுக்குப் புத்தி சொலலுகிறோம் கிறிஸ்து சமயம் மெய்யானால் சிவமதம பொய்யே. சிவமதம மெய்யானால கிறிஸ்து சமயம் பொய்யே. மெய் ஏதென்றும பொய்யேதென்றும் அறிகிறதற்கு மனநேர்மையுடன் விரும்புகிறீர்களா? சிவமதம் பொய்யென்றால இன்னும அதிகமதிகமாகச் சனங்கள் அதினால் வரவர அணுப்பப்படாதபடிக்கு அதன் பொய்யை எடுத்து வெளியிற் காட்டுவது உங்களுக்குப் பிரியமே?

எங்கள் சிநேகிதனாகிய சிவப்பிரகாசத்தை நங்கள் கடைசியாகக் கேட்டுக்கொள்ளுகிற காரியமென்னவென்றால், உம்முடைய சிநேகிதர் மறுபடியுஞ் சங்கம்கூடியிருக்கும்பொழுது மேற் கூறப்பட்ட இரண்டு கேள்விகளையும் அவர்களிடத்திற் கேட்டு அவர்கள் அவைகளுக்குக் கொடுக்கும் மறுமொழியும் எங்களுக்குத் தயவுபண்ணி அறிவியும்.

---

[Translation of the above.]

MESSRS. EDITORS,

I am obliged to you for inserting my first communication. I beg you will also give insertion to this.

The school referred to in my former communication, as about to be established, was opened on Saturday the 22d of Oct. it being an auspicious day. As there are no persons well qualified to teach the agamas and shasters, the patrons of the school have it in contemplation to send to the continent for a Teacher. For the present, Sanmoogam, the late Teacher in the Batticotta Seminary, will be employed to instruct the pupils in Grammar and Classics.

You observe, in your remarks on my first communication, that the Hindu religion is an *invention of the Brahmins.* We are grieved and ashamed that you should show such contempt for our religion. Have we not also the power to abuse you? When we send communications on the truth and importance of the Siva religion for publication in the Morning Star you neither publish them nor acknowledge their reception. This shows that you greatly despise our religion. At our late meeting Messrs. Mootoovalu Chettiar, Wytilinga Chettiar, and Ragonader Mudeliar, spoke for a long time on this subject, expressing their regret at your conduct. At our first meeting also, Mr. Tampiahpully, having related the story of the Rat, Mr. Vathakoottee, our priest, said that we ought by all means to establish a printing-press, and publish the absurdities of the Christian religion, by issuing small Tracts on the subject,—which would effectually shut the mouths of the missionaries and stop their abuse. While we were thus consulting on this subject, Mr. Mootoovalu Chettiar said that the Burghers in Jaffna wished to unite with them in supporting a printing press, and that he had written to England on the subject, and he advised that we should first confer with Burghers and then proceed to procure a press, &c.

At our third meeting, which was privately attended—Mr. Vathakoottee spoke on the excellence of the *Siva* religion and encouraged the audience to go on in their work. I beg therefore, that you will not, hereafter, publish any thing calculated to throw contempt on the worshippers of Siva, or on the brahmins. Yours, &c. A. SEVAPRAGASAN.

P. S. I have also heard that Mr. Kootdepullay, of Wanarponna intends to establish a school for English and Tamil studies.

*Reply to the above.*

We should like to know who Mr. Sevapragasam is. Will he have the goodness to tell us whether he is authorized by the distinguished patrons of the school for teaching the Siva religion, to make these communications, for we fear, that by and bye it will appear that he is an anonymous writer—and the truth of his statements will be denied by the parties whom he represents, and thus our readers will find themselves to have been deceived.

We also beg the favour of him or any other correspondent to send us the names of the *Chairman, Treasurer* and *Secretary* of the association lately formed, also the amount of money paid to the Treasurer, and the names of the respective Subscribers. We should also like to see the rules for the conduct of the association and the school. These will interest many of our readers, and will show whether what has been said by Mr. Sevapragasam is true or not.

We have a few remarks to offer on the communication of our correspondent. Our readers will remember that in Mr. Sevapragasam's last communication he said, Christianity was an "*invention of the Missionaries,*" and in our remarks on the subject, we asked him to show,

1. What evidence he had to believe the Siva religion is true?

2. What evidence he had to believe that Christianity is an *invention* of the *Missionaries?*

We promised in return to show what evidence we had to believe the Christian religion is true, and 2ndly what evidence we had to believe that the Siva religion is an *invention of the Brahmins.*

To these reasonable requests, he has not condescended to furnish an answer. They involve points of the greatest importance to all our readers, and we cannot but regret that our intelligent correspondent should pass them by as unworthy of his notice and attempt to divert the attention of our readers, by charging us with holding the Siva religion in contempt. We are not disposed to let him off in this way. We therefore call his attention again to these important questions, and beg him to furnish our readers with an explicit answer. If he does not answer them in a plain and intelligible manner, the readers of the star will perceive that Mr. Sevapragasam believes in a religion, the truth of which cannot be sustained by good evidence, and 2dly that he has made a false charge on Christianity which he cannot sustain.

In regard to the request of our correspondent, that we "will not hereafter publish any thing calculated to throw contempt on the worshippers of Siva or on the brahmins,"—we cannot promise any thing more than this: that we will not *knowingly* publish any thing about either the Siva religion or the brahmins that is *not true.* If the truth brings them into contempt, it is not *our* fault, but *theirs.* We are taught in sacred Scriptures, John iii. 19. 20. 21. "that he that doeth truth" seeks no concealment, but rejoices to come to the light that his faith and conduct may be known, examined, and appreciated—while on the contrary, he that "doeth evil, hateth the light neither cometh to the light" lest his faith and conduct expose him to merited rebuke and contempt.

The truth and justness of these principles cannot be gainsayed, and will

not be denied except by those whose conduct it so pointedly condemns. On this ground, Christianity fearlessly takes her stand. Its foundation is truth—its doctrines are truth—its precepts are truth. It seeks no concealment—it asks no disguise. It is proclaimed to the world in the Christian Scriptures, which may be known and read of all men. It has survived all the attacks of its adversaries—it has risen above all opposition—and it is destined by God to overthrow all false systems, and to fill the world with righteousness, peace and love; and from the signs of these times we anticipate more glorious triumphs for Christianity than have ever yet been achieved, as being near at hand.

To our Siva friends we say; if your religion is from God, it will stand, and no opposition will weaken its strength; if it is from God, it will bear to be examined;—its doctrines—its rites—its precepts will be agreeable to the reason and conscience of men;—if it is from God, it will show how guilty men may be redeemed from sin and hell and be reconciled to their offended maker;—if it is from God, it will be easily understood when made known. But where is the book that contains its revelations? Where are the teachers that make known its saving doctrines? Yea; where are the men who have believed and received its truths, and who show by their conduct that they have been born again—that they walk in communion with God, and have good hopes of eternal life, of which even death cannot make them ashamed? Where are they? We ought to know, and our readers ought to know, that we may avail ourselves of the saving benefits of the Siva faith before death shall remove us to the retributions of eternity. If it is from God, Christianity is false—our hopes are delusive—the Bible is an invention of wicked and designing men, and we are in danger of being lost for ever.

We repeat it, for we wish all our readers to understand it, if the Siva religion is true, Christianity is false, and will be overthrown; for that which is of God will stand, and that which is of the devil will fall, and human efforts will be unavailing to sustain the false or to destroy the true system.

We advise you, dear friends, to consider this, and take counsel of God, and not of your own hearts. If Christianity is true, the Siva religion is false, if the Siva religion is true, Christianity is false. Do you sincerely wish to know which is true and which is false? Would you rejoice, if the Siva religion is false, to have its falsity made known, that the people may no longer be deceived? We ask our friend Mr. Sevapragasam to put these two plain questions to his Siva friends when they meet again and communicate their answer for the benefit of our readers.

---

முகாமைக்காரரே,

தயவுபண்ணி நான் பின்னுலெழுதுங் கடிதத்தை உங்கள் மேன்மை பொருந்திய பத்திரிகையிற் பிரசுரஞ் செய்யும்படி உங்களை மிகுந்த தாழ்மையுடனும் வணக்கத்துடனுங் கேட்டு நிற்கிறேன்.

தெய்வாதீனஞ் செகச்சருவமந்திராதீனந்து தெய்வதந் தன்மந்திரம் பிராமணாதீனம் பிராமணோமம தேவதா, எது, உலகமெல்லாந் தெய்வத்துக்குள்ளடங்கினது, தெய்வம் மந்திரத்துக்குள்ளடங்கினது, மந்திரம் பிராமணனுக்குள்ளடங்கினது, ஆதலாற் பிராமணனே நம்முடைய தெய்வமென்றவாறு,

இதை வாசிப்பவர்களே கேளுங்கள் விக்கிரகங்களை வணங்கிறதைப்பார்க்க இப்பெயர்ப்பட்ட பிராமணுக்களை வணங்குகிறது திறம் "அந்தணருடனுவுக்கும் ஆபத்து வருங் காலத்திற்றந்த நல்லுயிரைவிட்டுந் தானதையரட்சித்தானேல் அந்தநற்சனனம்வீட்டைரம்பதுபிரமயோனி வந்தைசுவரியவானாய் வாழ்ந்துபின்றேவனுவான், எது, பிராமணருக்கும பசுவுக்கும் ஆபத்து வருங் காலத்திற் தன் உயிரையாகிலுங் கொடுத்திரட்சித்தானேயாகில்அவன் நூறுசனனம் பிராமணயோனியிலே வந்து பிறந்து ஐசுவரியவானாய வாழ்ந்து பின்னுந் தேவனுவானென்றவாறு, கேளுங்கள் மேற்சொல்லப்பட்ட கவிதையினுல பிராமணனுக்குஞ் சூத்திரனுக்கும் அறிவிலேயாகுதல் அல்லவென்று அவயவங்களிலாவது வித்தியாசமுள்ளவர்களாகத் தோற்றவில்லை ஆனதினுல் நான்சொல்லுகிறதென்னவென்றால் இதெல்லாம் வீணென்று நினைத்துக்கர்த்தாவைத்தேடி வழிபடுவோமாக. உங்களுடைய தாரகை அதிகமாக இடங்கொடாதென்றெண்ணி இவ்வளவுடனே விடுகிறேன்,

கு, சின்னத்தம்பி.

பஞ்சதந்திரக் கதை

மூன்றாவது

சந்தி விக்கிரகம். அல்லது அடுத்துக் கெடுத்தல்.

**PANCHA-TANTRA-KATEI:**

*The art of conquering an enemy by means of an affected friendship.*

[Continued from page 248.]

எவன் சத்துரு வருகிறனென்று பயந்து தன்னிடம் விட்டுப் போகிறனே அவன் மறுபடி அவ்விடத்திற்கு வருகிறதில்லை. பற்பிடுங்கின பாம்பும் மதமில்லாத யானையும் இடம் விட்டுப் பெயர்ந்த அரசும் எல்லாராலும் அவமானமடைகின்றன. மேலும், தன்னிடத்திலிருந்தாலொருவனே நூறுபேருடனே யுத்தம்பண்ணுகிறுன். ஆதலால் துருக்கத்தையும் மதிலையுமேற்படுத்திக்கொண்டவற்றின் சார்பாற் பகைவருடன் யுத்தம்பண்ணவேண்டும். அதனுல் வெற்றி பெற்றால், இலட்சிமியைப் பெறலாம், செத்தால் சொர்க்கம் பெறலாம். ஆகையால், இவ்விரண்டையுந் துறக்கலாகாது; நிலத்திற் சிக்கெனவூன்றிய வேரையுடைய மரங் காற்றினுல் விழாது, அந்த மரமே தன்னிடத்தில் இராவிட்டால் வாயு அதைத் தள்ளும் ஆகையால் ஏதொன்று செய்யத்தக்கதோ அதை இங்கே இருந்துகொண்டே செய்யவேண்டுமென, இப்படி அதன் கருத்தை அறிந்துகொண்டு ஐந்தாம் மந்திரியுன்னபிப்பிராயமெப்படியென அது சொல்லுகிறது, சுவாமி—என்னுலோசனையும் இப்படியே இருக்கின்றது ஏனென்றால், சார்பைவிட்டாற் சமர்த்தர்களும் பராக்கிரமக் குறைச்சலடைகிறார்கள். ஆதலால் யாரையாகிலும் உதவிக்குச் சேகரித்துக்கொள்ளவேண்டும். அதுவும் இருப்பிடத்திலேயிருந்தே சம்பாதிக்கவேண்டும். ஏனென்றால், உறைவிடம் விட்டுப் பிரிந்தவனுக்கு ஆரும் வாய்ப்பேச்சினுலுஞ் சகாயம் பண்ணார்கள். எப்போது அக்கினிக்குப் புற் சருகு முதலியவற்றின் சேர்க்கையாற் காட்டைக் கொழுத்த வலியுண்டாகின்றதோ அப்போது வாயு மித்திரத் தன்மையாய் உதவிபண்ணுகின்றது. அந்நெருப்பே விளக்கு வடிவாய் அந்தரமாய் நிற்கும்போது காற்றே அதை அவிக்கின்றது. மேலும் வலியவர்களுடைய சார்பிருந்தாலனைவர்க்கும் பெருமையுண்டாகின்றது: தாமரையிலையைச் சார்ந்த நீர்த்துளி முத்தினொளியை அடைகின்றது. அதனுல், சார்பில்லாமல் யாதொரு காரியமும் ஆகிறதில்லை. ஆகையால் மற்றொருவனை அநுசரிக்கவேண்டும். இதுவே என் கருத்தென. பிறகு மேகவர்ண ராசன் பிதாவின் மந்திரியாகிய சிரஞ்சீவியைப் பார்த்துக் கும்பிட்டு உம்முடைய சந்நிதியிலெல்லோரையுங் கேட்டவர்கள் சொன்ன உத்தரங்களையும உம்மைக் கேட்பித்தேன். இவற்றிலெது தக்கதோ அதை நீர் சொல்லுமென, இப்படி இராசன் சொன்னதைக் கேட்டுக் கிழமந்திரி, எல்லோருநூற்சார்பாலேயே சொன்னமையால் யோக்கியமாகவே இருக்கின்றன. ஆனாற் சத்துருபலவானுயிருந்தாலும் அவனுக்கு விசுவாசங் காண்பித்து அவனைக் கெடுக்கவேண்டும், இல்லாவிட்டாற் துருக்கம் முதலியவற்றிலிருந்து தனக்குஞ் சத்துருவுக்குமிருக்கிற பலாபலங்களை அறிந்தேதுசெய்வதோ அது செய்யவேண்டும். இது விசிதமாம். ஏனென்றால், மாதர்கள், முகநட்புள்ளவர்கள், பகைவர்கள், சூதாடுகிறவர்களிடங்களிலே மெய் முன்னுக்கு வராது. தெய்வம், குரு இவர்களிடத்திலே மெய்யாகவே நடக்கவேண்டுமென, இப்படிப் பெரிய மந்திரியின் வசனங்களைக் கேட்டு மேகவர்ணன் கேட்கிறது, பிறனுடைய புரைசல்களை எப்படி அறியலாமென, சிரஞ்சீவி மறைந்தபொருள்களைப் பிராமணர் வேதத்திலேயும் பசுவாசனையினுலேயும் அரசன் வேவுகாரரை அனுப்பியும் மற்றவர்கள் தங்கள் கண்களாலும இப்படிப் பலவிதமாய் அறிகிறார்களெனக் கேட்டு மேகவர்ணன், நல்லது இந்தப் பிரதானிகள் ஏன் பலவிதமாய்ச் சொனார்களென, சிரஞ்சீவி நாரதன் தரும இராசனுக்குச் சொன்னதைக்கேள், அரசன தனக்குபயோகமானவற்றைக் குறித்தொரு நாழிகை விசாரியாவிட்டாலும் உடனே கெடுதி வரும. உடையவன் கண்ணோடாப்பயிரழியாதா? ஆதலால்மந்திரி முதலானவர்களுடைய சமாசாரங்களைக் கணந்தோறுந் தெரிந்துகொண்டெப்போதுந்தான் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமெனக்கேட்டு, மேகவாணன் காகங்களுக்குங் கோட்டான்களுக்கும் அவை எப்படி வந்தது சொல்லுமெனக் காலங் கண்ட கிழ மந்திரி சொல்லத் தொடங்கிற்று.

(இன்னும்வரும்.)

# SUPPLEMENT TO THE
# உதயதாரகை.—MORNING STAR.

௨. புத். சஞ். ௨௨.] ௲௮௱௪௨ ௵. கார்த்திகை. ௰௭தேதி வியாழக்கிழமை, Thursday, November 17, 1842. [Vol. II. No. 22.

### Hints on the Theory and Practice of Gardening.

Transplanting.

The art of transplanting is among the most important business of the gardener, but the principles on which its success or failure depend, seem but imperfectly understood. Hence the discordance of opinion existing among writers on the subject. The following aphorisms from Lindley's first principles Nos. 40, 41, and 42, will explain in very few words, what those principles are

"40. Plants have the power of replacing spongioles by the formation of new ones so that an individual is not destroyed by their loss.

"41. But this power depends on the co-operation of the atmosphere and upon the vital powers of the species.

"42. If the atmosphere is so humid as to hinder evaporation, spongioles will have time to form anew, but if the atmosphere is dry, the loss by evaporation will be so much greater than can be supplied by the injured roots that the whole system will be emptied of fluid before the new spongioles can form.

In these three propositions we have the key to this useful branch of the art. When a plant is taken out of the ground, many of its roots are necessarily injured, and the remainder are less able to support the stem than before. This diminution of power will be in proportion to the degree of mutulation of the roots.

We have remarked above that plants have seasons of repose or inaction, and seasons of growth and activity. During the former of these, which usually happens in this country after the maturation of the annual crop of fruit, the demand of the roots is small, the fluids being stagnant, compared to what it is during the season of action, when new leaves and shoots are forming and the flow of sap is rapid, and perspiration copious. The season for transplanting therefore is during the period of rest, as time is thereby allowed to form new roots and spongioles before that of growth returns. For these reasons the best season for transplanting in Europe is immediately after the fall of the leaf, or on evergreens during wet weather, late in autumn or the beginning of winter. In this country these changes are not so well marked, as most of our trees are evergreens, and vegetation is always in progress, but by attending to the criterion furnished by the refining of fruit we shall not greatly err. In Europe damp or rainy weather is always considered advantageous, as the perspiration from the bark of deciduous trees and from the leaves of evergreens is then least.

In this part of India unfortunately we are seldom favoured with such weather during the season of rest, and cannot wait for it, as a fall of rain is almost immediately followed by a renewal of growth. The most favourable time therefore for transplanting, is in still cloudy weather, and the plants transplanted should be immediately sheltered from wind by being hedged in with bushes and shaded, to break the force of the wind and to cut off the stimulating influence of the sun's rays. Still further to enable the mutilated roots to furnish the fluids required to counteract the effects of too free perspiration, the ground should be previously thoroughly soaked with water.

Next in importance to selecting a fitting season is the preservation of the roots of transplanted trees. Too much care cannot be bestowed on this division of the operation, as the former is of little consequence if the latter is neglected. Every minute fibre of the roots should if possible be saved, as it is by them alone that nourishment is taken up, and as they are mostly produced at the circumference of the circle formed by the roots, the earth should be removed at some distance from the tree so as to ensure as many as possible being taken up entire. A convenient method of procuring a large supply of young fibres near the base of the stem, is either to dig a trench round the tree some months before removal, by which all the principal roots are cut across or to cut back the principal limbs, the extremities of which will emit abundance of fibres, which can then be removed uninjured in a moderate ball of earth. As the large roots when torn and bruised in the operation, are apt to lose their vitality and decay, and become the seat of disease that may ultimately destroy the tree they should all be cut clean off when the wound will heal kindly.

These remarks are applicable to the transplanting of trees or shrubs: the same principles apply to the transplanting of succulent vegetables, which are usually transplanted two or three times to force them to throw out large quantities of fibrous roots, and thereby augment their absorbing power.

In transplanting from pots or boxes into the open ground, for early crops of vegetables, the plot ought to be prepared for their reception by being first thoroughly moistened and cooled, which is effected by copiously flooding it daily, for two or three days before, and shading during the heat of the day the same as if the plants were already there.

The practice of pruning trees when transplanted is one of doubtful propriety except to a limited extent. The reason of this is that the formation of roots depends on the healthy action of the leaves and the renovation of the injured ones will be only in proportion to the healthy action of leaves and buds,—their removal therefore is opposing an obstacle to this renovation. The danger to be feared is that the perspiration of the leaves may exhaust the fluids faster than the roots can replace them. In such cases pruning is necessary, but should be sparingly practised, and if transplanting has been well performed will not be required.

---

### சோபன செய்தி ௪வது

[Auspicious occurrences No. 4th.]

இழந்துபோன இஸ்ரவேற் கோத்திரத்தார் கண்டுபிடிக்கப் பட்டார்களென்பது (௩௫௮ம். பக்கத்தினின்று)

பலஸ்தீன் அல்லது கானானென்னுந் தேசம் எல்லாத் தேசங்களிலும் அதிக சிங்காரமானதும் பாலுந் தேனும் ஓடுகிற தேசமுமாயும் இருந்தது. நமது பராபரனாகிய கர்த்தரின் கண்கள் வருஷத்தினது துவக்கமுதற்கொண்டு வருஷத்தின் முடிவு வரைக்கும் அத்தேசத்தின் மேல வைக்கப்பட்டிருந்தன. கானானியனுடைய பிதாவாகிய காமுடைய வம்மிசத்தார் இத்தேசத்தை ஆட்சிப்பண்ணி வந்தார்கள். கானானின் ஏழு சாதியானவர்கள் தங்கள் அருவருப்பான விக்கிரகாராதனையின் நிமித்தியம் பராபரனுடைய பார்வைக்கு முன்பாகத் தங்களைத் தாமே தீட்டுப்படுத்தினார்கள். இவர்கள் இஸ்ரவேற் புத்திரரிலும் பார்க்கப் பெரியவர்களும் பெலசாலிகளானவர்களுமாகையால் பராபரன் இவர்களுக்குவிரோதமாய் எழும்பாதிருந்தால் இவர்களைத் தங்கள் சுதந்தரமான இடத்தை விட்டுப் பிரிக்கக்கூடாது. இதைக் குறித்துக் கர்த்தர்சொல்லுகிறதாவது, தேசந் தன் குடிகளைக் கக்கிப்போடத்தக்கதாக அதிலுள்ள அக்கிரமத்தை விசாரிக்கிறேனென்பதே. மாறுதவராகிய பராபரன் இந்த வார்த்தையை விக்கிரகாராதனைக்காரரைத்தாம் எக்காலத்திலும் அரோசிக்கிறவரென்பதற்கும் அவர்களை அழிக்கத் தீர்மானித்திருக்கிறேனென்பதற்குங் குறிப்பாகப் பேசினாரென்று காணப்படுகின்றது. இந்தப் பெலசாலிகளான ஏழு சாதியாரையுங் கானான் தேசத்தை விட்டுத் துரத்தி அதில் இஸ்ரவேலரைக் குடியேறச் செய்ததின் மேல், மோசே எழுதின ஐந்தாமாகமம் ௭. அதிகாரத்திற் சொல்லப்பட்டபடி கானானியர் துரத்தப்படுவதற்குக் காரணமாயிருந்த விக்கிரகாராதனையாகிய பாவத்தில் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படி பராபரன் விசேஷமான புத்திமதிகளையும் பயபத்தியான எண்ணங்களையும் போதிவித்தார். இவ்விதமான போதனைகளையும் எச்சரிப்புகளையும் அடைந்த இஸ்ரவேற் சந்ததியார் பூமியிலே தங்களுக்கு மேலான சுதந்தரத்தை ஆட்சிப்பெறக் கொடுத்த தங்கள் தேவனை விட்டு மறள விழுந்தார்கள். அவர்கள் அடிக்கடி விக்கிரகாராதனையாகிய கிரியாங்கங்களைச் செய்ததினாலே மெய்யான தேவனை விட்டுச் சாவுக்கினமாகி புறளவிழுந்தார்களென்பது தெரியவந்தது. இதைக் குறித்து வேதத்திலும தேவனுக்கல்லப் பேய்களுக்குப் பலியிட்டார்களென்று (௫ மோசே ௩௨. அதி. ௰௬, ௰௭.) வசனங்களிற் சொல்லப்பட்டது. விக்கிரகாராதனையைப் பற்றித் தேவனுக்கும் இஸ்ரவேற் சனங்களுக்கும் உண்டான இந்தப் பயங்கரமான வழக்கு இப்பொழுதே ஆரம்பித்து (௮௱) அல்லது (௯௱) வருடக்காலமாக நிலைகொண்டு அதினால் இஸ்ரவேல் இராச்சியபாரத்தைச் சேர்ந்த பத்துக்கோத்திரங்களும் புறம்பே துரத்தப்படவும் பின்னால் யூத இராச்சியத்தைச் சேர்ந்த இரண்டுகோத்திரங்களும் அப்படியே தள்ளப்படவுங் காரணமாயிற்று. விக்கிரகாராதனையின் நிமித்தியமாக முன்பு கானானியருக்கும் பின்பு இஸ்ரவேற் சந்ததியாருக்குஞ் சம்பவித்த இந்தப் பயங்கரமான தீர்ப்புகளை ஒவ்வொரு இந்துமதஸ்தனும அறிந்து தேவன் தமது செயலினால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அஞ்ஞான அரசாட்சியையும் அகற்றிப்போட்டாரென்பதைக் காணும்போதும் சத்தியவேதத்திலே அந்தத் தீ

ர்ப்பைப் பராபரன் தமது பரிசுத்த சீயோன் மலையின்மேலே அபிஷேகம் பண்ணிவைத்த தமது குமாரனுக்காகச் சிங்காசனத்தில் இருந்து புறப்படப்பண்ணினாரென்று வாசிக்கும்போதும் பயபத்தியாய்த் தியானிக்கவேண்டிய ஒரு காரியம் இருக்கின்றது. இதைக் குறித்துச் சங்கீதம், உ. அதி. எம். வசனத்திலும், ஏசாயா, சுய. அதி. யஉம். வசனத்திலும் சொல்லியிருக்கிறதாவது, உம்மைச் சேவியாத சாதியும் இராச்சியமும் அழியும். அந்தச் சாதியார் பாழாகவே பாழாவார்கள் என்பதே. இதை விட்டு இவ்விடத்திலே விக்கிரகாராதனையின் நிமித்தியமாகத் தங்கள் சுதந்தரமான இடத்துக்கு நீங்கலான கோத்திரத்தாரைக் குறித்துப் பேசுகிறேன். அவர்களில் மீதியானவர்களை டக்குத்தர் கிறான்று (Dr. Grant) என்பவர் கெடிஸ்தான் மலைச் சிகரங்களின் மேற் கண்டோமென்று நினைக்கிறார். இந்தக் கோத்திரத்தாருடைய அடிமைத்தனத்தைக் குறித்து.உம். இராசா. யல். அதி. சூ, யஅ. வசனம் வரைக்குஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்களுடைய அடிமைத்தனத்தைக் குறித்து ஒரு கல்விமான் நினைக்கிறதென்னவெனில், அநேகரால் இன்னும் போய்ப் பார்த்த இடங்களில் இவர்களிருப்பார்களென்றெண்ணப்பட்டாலும் இந்நாள் வரையில் அவர்கள் பின்னடியில்யாதொருவர் இருக்கிறதாக ஒரு செய்தியும் கேள்விப்படவில்லையென்றும் அல்லது யாதொருவர் இருக்கிறதாகக் காணப்படவில்லையென்றுந்தான் இது சற்றே கனங்கொண்டதும் கிறிஸ்துமத உலகத்தவர்கள் சரியாயங்கிகரியாமற் பிரிவினைகொள்ளக்கூடிய ஒன்றுமும் இருக்கின்றது. இந்தக் கேள்வி இஸ்ரவேலருக்கு மாத்திரம் அல்ல உலகத்தவர்கள்யாவர்க்கும் அடுத்த முக்கியமான காரியம். இதுமெய்யாகவே வேதத்தின் உண்மையைக் காட்டுகிறதாகவும் இஸ்ரவேல் இராச்சியத்தாரைப் பற்றிய அநேக தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதைக் காட்டுகிறதாகவும் இருக்கின்றது. இப்படியே சரிவர நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் ஏசாயா எழுதின, யக. அதி.ய, யகூ வசனங்களிலும், எசேக்கியேல்,கூள. அதி.உக,உஅ. வசனங்களிலும்,கொலோசியர், உ. அதி, க, உகூ.ம வசனங்களிலுங் காணப்படும். இக்காரியத்தின மேன்மையினால் அநேகர் பலபல காலங்களிலும அதிக முயற்சியுடனே இழந்துபோன இஸ்ரவேற் கோத்திரத்தார் எங்கே என்று தேடும்படி ஏவுதலடைந்தார்கள். இப்படியே தேடின இடத்தில் இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் ஒரு சத்தங் கிளம்பியும் அவர்களைக் கண்டுபிடித்தார்களென்பதற்குப் பூரணமான திருட்டாந்தரங்காணப்படவில்லை. அவர்கள் காணப்படாதேபோனால் பலபல யோசனைகள் அவர் மனதில் உண்டுபட்டன.ஆகையினாலே காணப்படாத ஒரு அவிசுவாசி கிறிஸ்துமார்க்கந் தேவாவியினால் உண்டுபட்டதல்லவென்பதற்குப் பிடிகிடைத்தது என்று நினைக்க இடமாயிருந்தது. அநேகர் இஸ்ரவேலரைப் பற்றிச் சொல்லிய தீர்க்கதரிசனம் புறமான இஸ்ரவேலரைக் குறித்தல்ல, ஞானக் கருத்தாகிய இஸ்ரவேலரைக் குறித்து அல்லது அஞ்ஞானிகளிற் குணப்பட்டவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டதென்று முடிப்புக்கட்டத் தொடங்கினார்கள். சிலரோ இந்த இஸ்ரவேலரடிமைத்தனத்தை விட்டுத் திரும்புவதைக் குறித்துச் சந்தேகித்தார்கள். ஆனாலும் இதோ பராபரன் ஒரு காரியத்தை அது நிறைவேறுங் காலம் வருமட்டாகவும் தமது சனங்களின் விசுவாசத்தைச் சோதித்தறியுமட்டாகவும் புதைபொருளாக்குவது அவருக்கு மகிமையாய் இருக்கின்றது. இந்த இஸ்ரவேலரைக் கண்டோமென்பதற்கு (Dr. Grant) டக்குத்தர் கிறான்று என்பவர் சொன்ன நியாயங்களை அவர்கள் அங்கிகரியாது விடுவது ஆச்சரியமல்ல. ஏனெனறால், அவர்கள் பேதமையாய எண்ணுகிற நோக்கமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். உலகத்தவர்கள் நெடுங்காலமாகத் தேடின இஸ்ரவேலர் இருக்கிறார்களென்பதைப் பற்றிப பூரணமாய் அவர்கள் அறியும் வரைக்கும அவர்களைப் பற்றிச் சொல்லப்பட்ட திருட்டாந்தரங்கள் முறிந்ததாகவுங் காரியத்துக்கொவ்வாததாகவுங் காணப்படும். இனி நாம் அறியவேண்டிய முக்கியமான காரியமென்னவெனில்,(Dr. Grant) டக்குத்தர் கிறான்று என்பவர் தாம் பிறந்த தேசத்துக்குத் திரும்பி வந்த பிறகு அந்தக் கேடான நிலபரத்தில் இருக்கிற நெஸ்தோரியருக்கு இனி வருங் காலத்தில் அதிக உதவி செய்து அவர்கள் சீர்திருந்துமபடி செய்யவேண்டுமென்கிற எண்ணிக்கைகொண்டுதாமும் பின்னொரு குருவுமாக அத்தேசத்துக்குப் போயிருக்கிறார்கள் என்பது. இதுநிற்க, இப்பொழுது நாம் பேசிவந்த கோததிரத்தாரைக் குறித்து மோசமாய் எண்ணுதபடிக்குச் சொல்வதென்னவெனில், நெஸ்தோரியரென்று பேர்கொண்ட எல்லாரும் இஸ்ரவேலரில் இருந்து உண்டானவர்களென்றெண்ணுவதில்லை. ஆனாலும் கெடிஸ்தான் மலைகளில் தஞ்சமாயிருக்கிற நெஸ்தோரியரில் மீதியானவர்கள் இஸ்ரவேலர்தானென்று சொல்லுகிறோம். மேலும் டக்குத்தர் கிறான்று சொல்லுகிறபடி காணப்படுகிறதென்னவெனில், இந்த மலையார் நெஸ்தோரியரென்றழைக்கப்பட்டாலும் இவர்கள் நெஸ்தோரியஸ் (Nestorius) என்பவன் இந்தக் காலத்துக்கு வெகு வருஷங்களுக்கு முன்னே ஒருவேளை அப்போஸ்தலர் இருந்த காலங்களிலே யூத மார்க்கத்தில் இருந்து கிறிஸ்துமார்க்கத்திற்குத் திரும்பினவர்களாகக் காணப்படுகின்றது. அதிகம் நயந்த பின்னொரு காரியமென்னவெனில், பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கிறவர்களாகவும், மனப்பூருவமாகச் சிலுவையின் நிலமையைக் காக்கிறவர்களாகவுஞ் சுத்தமான விசுவாசத்தைக் கைக்கொண்டவர்களின் சந்ததியாரான இஸ்ரவேற்கோத்திரத்தார் நமக்குக் கிட்ட இருக்கிறார்களென்பது பிறியமான எண்ணந்தான். இந்தக்குருமாராகிய இவரும் அவர்களுக்கு உதவிசெய்யவென்று போனதினால் அந்த மலையார் மிகவுங் களிகூர்ந்தார்கள். இப்பொழுது நடந்து வருங் காரியங்களை நோக்கிப்பார்க்கும்பொழுது அவ்விடங்களில் எங்கும் கிறிஸ்துமார்க்கப் படிப்பினைக்கடுத்த ஏதுக்கள் சீக்கிரத்திலே துவங்குமென்று நம்புவதற்கு இடமுண்டு. அன்றியும் இவர்கள் படிப்பிக்கப்பட்டதின்பின் தங்கள் முற்பிதாக்களைப் போலத் தாங்களுங் குருமாராக உட்படுவதினால் நாம இப்பொழுது கண்ட இடத்தை விட்டு மறு இடங்களில் இருந்தும அநேகர் குருமாராக ஏற்படுவார்களென்று திடபரமாய்க் காத்திருக்கிறோம்.

*To the Editors of the "Morning Star."*

GENTLEMEN,

I beg to offer an answer to W. W's Arithmetical question proposed in No. 20 of your paper, and hope it will be found satisfactory.

H. H. the Rajah's Free School. I remain Gentlemen,
Trivandrum 2 Nov. 1842. Yours most obediently
G. M.

A's, B's, and C's stocks are respectively as 2, 4 and 6, and their times as 3, 2, and 1, and the gain must be divided in the ratio compounded of these ratios, that is, as 6, 8, 6. A and C will therefore have equal shares, and B's will be to theirs as 6 : 8.

$$\text{Hence } 20 : 88 :: \left\{ \begin{matrix} 6 \\ 8 \end{matrix} \right\} : \begin{matrix} 26\ 2\text{-}5 \text{ A's or C's share.} \\ 35\ 1\text{-}5 \text{ B's.} \end{matrix}$$

உதயதாரகையின் முகாமைத்துரைகளவர்களை மிகவும்வந்திக்கிறேன்,

அதாவது, இந்நாட்களில் நீர்கொழும்புப் பட்டணத்தில் வெகுபேர் புத்தியீனத்தினாலும் அவர்களின அறிவீனத்தினாலுந் தன்தன் சாதி அல்லது குலமேஉயர்ந்த சாதியென்றுபாராட்டி வீணானபேச்சுக்கள் பேசிக்கொண்டு திரிவதினால் அவர்கள் அதினாலடைகிற லாபமொன்றுமில்லாதிருக்கிறதினால் தாங்கள் எனதும்பரில அன்புவைத்து இதற்கொப்பான வேதாகம ஒப்பனைகளைக்கொண்டு பிரசித்தப்படுத்தி இப்பேர்ப்பட்ட மூடத்தனமான ஆட்களுடைய வீணான அல்லது மங்கேடான கருத்தைத்தள்ளி அவர்கள் நலநடக்கையாய் நாட் கழிக்கத் தாங்களிதற்குத் துணைசெய்வீர்களென்று நம்பியிருக்கிறோம், இப்படியே செய்தாற் தங்களுக்குப் பெரிய புண்ணியமுந்தவிர எலலோருடையவும ஆத்துமலாபத்துக்கு மிகவும் நலமாயுமிருக்கும்.

துரைகளே,

தாங்களிப்படிச்செய்தால் வரவர இவ்விடத்திற் கையொப்பக்காரர் அதிகப்படுவது சந்தேகமிலலை. அந்தனாலேயோவெனில் அவர்களின் மதியற்றகருத்தை அல்லது சந்தேகத்தை இதிற்தெளியக் காட்டியபடியாற்றான் மேலும் வருகிறவருஷந் துவக்கமாகத் தாரகை கைப்பற்ற இரண்டு ஒப்பந்தக்காரர்என்னுடனேதானே பேசித் திடப்பண்ணியாயிற்றுது இப்படிக்கு

சூஅாசஉ ம். ஆ. இதின்விருப்பமுள்ள
காத்திகைமூ. க. தீ. ஓர்சுபஸ்கிறைவரான

M. A. DE TYLVAN.

## பத்திராதிபர் குறிப்பு.

"எல்லாச்சிறப்பின் அகந்தையைக் கொலைத்துத் தேசத்திலே கனமுள்ள யாவரையுங் கனவீனமாக்குவதற்காகச் சேனைகளின்கர்த்தர் இதை யோசித்தார்" (ஏசாயா, உ௩, அதி, ௯, வச.) "பெருமையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே (கர்த்தாவாலே) கூடும்" (தானியேல், ௪அ, ௩௭, வச.)

"உமது கற்பனைகளைவிட்டு வழிவிலகிச் சபிக்கப்பட்ட அகந்தைக்காரரை உதம்புகிறீர்" (௱௰௯, சங்கீதம், உக, வச.) இத்துடனே முதலாஞ் சங்கீதத்தையும் மேல்வகையான ஆட்கள் வாசித்துணர்ந்து கொள்வது அதிக உத்தமம்.

---

## சிரார்த்தநிக்கிரகம்.

### On the vain penalties of not performing funeral ceremonies found in Puranas.

துரைகளே,

சிரார்த்தம் பண்ணுகிறதே வெகு புண்ணியமான காரியமென்றும் யாகத்தில் ஒன்றான பிதிர்யாகமென்றும், எந்த நியமத்தைத் தப்பவிட்டாலும் இக்கிரியையைத் தப்பவிடப்படாதென்றும், அப்படியே ஸ்மிர்திபில் சுருதிமுத்தாபலத்தில் இதற்கென, (௩௬) கிரந்தச் சுலோகமுள்ள காண்டமும், மேலும் இதைப் பற்றிச்சொல்லியிருக்கிற ஆகமங்களும் புராணங்களும் உண்டு. இவைகளில் இப்படிச் சொல்லியவையெல்லாம் பிராமணர் கட்டிக்கொண்ட கட்டென்பது சத்தியம். இக்காரியஞ் செய்யாதவர்கள் பைசாசாகவும் தரித்திரராகவும் அவயவக் குறைவுள்ளவர்களாவார்களென்றுஞ் சொல்லியிருக்க, மகமதுமதம், கத்தோலிக்கமதம், சத்தியவேதமுதலிய மதங்களிலுள்ளவர்கள் அப்படியாகவில்லையே. இது பொய்யென்பது அதைக் கட்டினவர்களுக்கு நன்றாய்த் தெரியும். தெரிந்தும் பிராமணர் அச்சடங்கை விடாமற் செய்கிறார்கள். இலங்காபுரியிலும் மற்றுந்திராவிட முதலிய தேசங்களிலுமுள்ள நான்கு வருணத்தவர்களுஞ் செய்யாதுவிடவில்லை. அவர்களிற் புத்திமான்களாகிய சிலர் மாத்திரம் விட்டுத் தள்ளிப்போடுகிறார்கள். உதாரணமாக, திருவிளக்குச் சந்நிதியில் நாகேந்திர ஐயரவர்களும் அவர் பத்தரும் பின்னும் வேதாரணியத்தில் இருந்து இலங்காபுரிக்கு வருகிற சூத்திரப் பண்டாரங்களுமே. நான் இதை எப்படி அறிந்தேனென்றால், இப்பண்டாரங்கள் முறைக்கு முறைவேதாரணியத்தில் இருந்து இலங்கைக்கு வந்து இரண்டு மூன்று வருடம் இவ்விடமிருந்து பிறகு போவது வாடிக்கை. அத்தருணத்தில் அவர்கள் குருபூசை என்றொரு பூசைசெய்துவருகிறார்கள். அதென்னவென்று அவர்களைக் கேட்கும்பொழுது, சிரார்த்தமெனச் சொல்லுகிறார்கள். அச்சமையத்தில் அவாகள் பிராமணரை அழைத்து அந்நியமஞ் செய்யும்படி வேதங்களில் வசனமிருக்கின்றன அந்த ஒழுங்கின்படி அவர்கள் பிராமணரைக் கூப்பிடுவதுமில்லை, அவர்கள் போய்ச் செய்வதுமில்லை. பிராமணர் இல்லையோவென்று கேட்டால், இவ்விடத்தில் அநேகம் பிராமணர் இருக்கிறார்கள். இராமேசுரத்து மகா சனங்கள், வண்ணைநகரிற் சிவன்கோவிலிற் பிராமணர், நல்லைநகர் கந்தசுவாமி கோவிலிற் பிராமணர், விளைவேலி நீர்வேலி என்னுந் தலங்களில் இருக்கும் பிராமணக் குருக்கள் முதலியோருமிருக்க இவர்களை விட்டுச் செய்வது நியாயமா? அப்படிச் செய்யும்பொழுதே தாங்கள் செய்வதே நியாயமென்று எண்ணி வேதங்களிலுள்ள வசனத்தைப் பொய்யெனத் தள்ளுகிறார்களென்று நிதானிக்கவேண்டும். பிராமணரலலாமல் மற்றும் வருணத்தவரொருவரும் பூசை செய்யப்படாதென்று வசனமிருக்க, கோவிற் பூசையும் திருவிழாவும் பண்டாரங்கள் செய்துவருகிறார்கள்.

ஆகையால், அவ்வித வசனங்கள் பிராமணர் தாங்கள் பிழைக்கும்படி செய்த வீண்கட்டுகளென்பதற்குத் தன்மதத்திற்றானே போதிய அத்தாட்சி கண்டிருக்கிறபடியால் பிரிய சிநேகதரே,

இவ்வகையான வீண் சடங்குகளைச் செய்து நேரம்போக்காமல் ஏககடவுளொருவரையே நாடோறுஞ் சிந்தித்துப் பூசித்துப் போற்றி நடப்போமாக. இப்படி உங்களேசன்

சிவமதநிக்கிரகி.

---

[Translation of the above.]

It is said in Agamas that whatever else is neglected, we should certainly perform the ceremonies of the dead, and 36 Sanscrit verses are quoted on the subject. Amongst other things it is said, if any one do not perform funeral ceremonies according to the Rules in the Agamas, he will become a devil, and poor, and maimed.

But we do not meet with any such case among the Mohammedans, Catholics, and Protestants, who disregard these rules. We may therefore know that these books are false—invented by the brahmins to get money and rice for themselves. Besides, many brahmins have given up the performance of these ceremonies, as Nagantra the brahmin of Batticotta, and his disciples, and the Pandarum, who came from the coast. It may be asked how I came to know about this: I answer, many Pandarams come from Vadaraneam and remain in Ceylon 3 or 4 years. During this time, they perform a ceremony called *Priest Poojah* for the dead. They neither perform ceremonies according to the rules of the Agamas nor call the brahmins as is required by those rules.

It is further said in the Agamas, that ceremonies at festivals and other feasts should be performed by brahmins. Yet in opposition to this, the Pandarams do it themselves, and no harm comes to them. Who can believe in books and doctrines of this sort? Dear friends, let us leave such vanities and serve the only true God.

---

உதயதாரகையை—யிதமுடனுரைக்குஞ்
சதிர்பெறுமெடிற்ற—ரதிநயமெனவெனிற்
காரிருணீக்குஞ்—சூரியன்போலிப்
பாரினிலுதித்த—சீரியற்கைதுதி,

செய்து வினவுகிறதென்னவெனில், திரிச்சிரப்புரம், உறந்தைப்பதி, சுவாமிநாதக்கவிராயரவர்கள்மாணாக்கரிலொருவராகிய, திருமலைக்கவிராயரவர்கள் பாடியசெய்யுட்கருத்தமிவ்விடத்துப்புன்மையாகிய மனதுக்குத்தோற்றுமையால் தங்கள்கருத்துக்குத்தோற்றிய அருத்தஞ்செய்வீர்களென்ற கோரிக்கையைக்குறித்தெழுதியவோரெழுத்தலங்காரவெண்பா,

தததுததிதிதததுதததோததைததததத
தைதிததுததிததாதாதேதொதததி
திததிததைததததுதததைததுதததத
தொததுததைதுதிததோதாதே:தாதுதோ

இப்படிக்கு

திரிச்சிரபுரம் சாலமோனுதறைட்டர் ரூப்பரின்றென்றிங்சாஸன்சுடிப்பாட்மென்று, சதர்ன் டிவீசன்.

---

கோவிடைதாரகைக்கெதிர், பூவிடைதாரகைசெலுத்துமாவிடையனமயினர்த்துரையவர்களுக்கு, மண்டுதெண்டம்விண்டனம்.

கூற்றமென்னக்கொலைபுரிவேனிலா
னூற்றிதழ்க்கமலத்திறைநோன்மையா
லாற்றல்சான்றமலர்க்கணையைந்தல
வேற்றநல்கினுலகினையென்செயான்.

இந்நைடதச்செய்யுளின் பஞ்சபுஷபபாணமன்றி யேற்றபாணங்களையீய்ந்திட்டாற்காமனுலகையழிப்பான்.எ.று. மென்மையவாய புஷபபாணங்களாலுலகைவருத்துகின்றகாமன் வன்மையவாய வேற்றபாணங்கள்பெற்றுலகை அழிப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. அதன்கருத்தப்படியாயியாழ்ப்பாணமாணக்கனெனக்கையொப்பம்வைத்தவர், ம.றி.றி வேதகிரிமுதலியாரவர்கள் சப்த்தபாணமுண்டெனக்காட்டியதற்குமாறாக அச்செய்யுளிற்சொல்லியிருக்கின்றதெனக்கூறியவேதோ? வீணுகமாணாக்கன்விளம்பியவினு மாட்சியின்றியழிந்தொழிந்ததென்பதற்கையமின்றாயினும் அவரென்னெண்ணங்கொண்டுவினுவினுரென்பதையறிவிக்கட்டும், பின்னர்பட்டுங்கெட்டும்போகப்பண்ணுவேன். பினறிக்கன்றி மூட்டுப்படப்பேசுவேன்.

இங்ஙனம் ஐப்பசிமீ· ௩௰தி.

கதிரைவேற்கவிராயன்.

---

ம. றி. றி. துரையவர்கட்குப் பலகாலும்வந்தனம்.

உடுப்பிட்டி முருகேசர் சந்திரசேகரனே, யாழ்ப்பாணமாணக்கனே, "ஓதிவா" என்னுமடி சரியாகவிருக்க அதைப்பிழையெனவரலாகாதே. முதலியாரவர்களைத் தந்திரமாகக் கேள்விகேட்டது சரியோ? சந்திரசேகரனே,

"பன்னிரண்டுதொகுதி" என்றபாட்டின் முதலடி இலக்கணங்களுக்குச் சரியா? என்றீர் இலக்கணத்துக்குச்சரியல்லாமற் பிழையுற்றதோ? கண்டிலம், கண்டிலம். "பாவலர்க்குமாவலுறப்பாடப்பிரசங்கிக்க" என்பதின் சீர்பிரிக்கிறேன் காணுதிர் "பாவலர்க்கு" கூவிளங்காய் "மாவலுற" கூவிளங்காய் "பாடப்பி" தேமாங்காய் "ரசங்கிக்க" புளிமாங்காய் எனவுய்த்துணர்க காரிகை முதற் கல்லும் கற்றபின் சரியெனச்சொல்லும் "கோர்த்து" எனுமு சொல்லின் பகுதியாதென்றீர். அந்நூலின்சட்காட்டியதின் மேற் குற்றஞ்சாட்டியெழுத வேண்டியதேதோ? இலக்கணவிலக்கியக் களஞ்சியவழி எங்கள் மனவிருளகற்றும். றி, றி. வேதகிரிமுதலியாரவர்களைச் சிலபலபேர்கள் வெல்லத்துணிவது எலிபூனையை வெல்லத்துணிவபோலாம். இப்படிக்கு

கந்தர் ஆறுமுகவன்.

---

(An Explanation of a Verse in Scanda Purana.)

முகாமைக்காரரே

உங்கள் பத்திரிகை ௰௮ம் சஞ்சிகையில் ஓர்மாணுக்கன் கேட்ட கந்தப்புராணச் செய்யுளுக்குரை,

காகபந்தரில்—காகம்பந்தரிட்டதுபோலும்
கருமுகில்—கரியமேகம்போலும்
காளிமங்களும்—கருமைநெருங்கும்
மாகநீள்கரியாவையும்— ஆகாயமளவுக்குயர்ந்த யானைகளெல்லாவற்றையும்
குழுவொடுவாரி—கூட்டத்தோடு அள்ளிக்கொண்டு (பாவியாறு
போகலுற்றன—செல்லுகுது (செல்லுந்தன்மை)
மேற்றிசைப்புணரியுண்டமையா— மேற்குச்சமுத்திரத்தைக்குடித்து அடங்காது
மேகராசிகள்—முகிற்கூட்டங்கள்
குணகடன்மேவுவபோலும்—கிழக்குக்கடலிலே போவதுபோலயிருக்குது.

இதிற்பிழையைத் தாரகைவழியாய்க்காட்டவும்.

யாழ்ப்பாணம் ௲௮௱௪௨ இப்படிக்கு
ஐப்பசி மீ ௭ந்தி. ஓர்மாணுக்கன்.

---

துரைஅவர்க்குச் சலாம்,

வேதகிரிமுதலியார் கடைமாணுக்கன் "மாயாதவாகர" என்னுஞ்செய்யுளுக்கு வியாக்கியானஞ்செய்ததில் "ஆரணவேதமெனப்புகன்றூர்" அஃதுகூறியது கூறலென்னுங்குற்றமென்று எனக்குத் தோற்றுகுது அது கூறியதுகூறலென்னுங் குற்றந்தானோ அல்லது வேறியாதோவென்று அம்மாணுக்கர்தாமே சொல்லுவாராக.

யாழ்ப்பாணம் கெங்காவட்டர் குமாரன் சுந்தரப்பாண்டியன்.
புரட்டாதி மீ ௨௮தி.

---

A Query on Arithmetic.]

இலாட சங்கலிதம்.

முத்துமாலைக் கணக்கு

பகலவன் கரத்தாற் பங்கயமலர்தல்போல
கவிருளிரித்துவகமலரலர்த்துங்
தாரகைதனக்குத் தருமதிபதியாய்
வார்செறிமனமாம்மைனர்த்துரைக்கு
வந்தனம்நீள்கச் சுந்ததம்வாழ்க.

உரருவு நரர்பரவுநிருபனருண் நிரைமணிகடொருவாயிரத்தினரையா—மூனதுவிலேலாடசங்கலிதமுறையுறுவதாமொருவைந்துமகவணிகவாம்—வரமருவுதனையரணிமணி சரியதாயுமினவகையொடிருநிரையதாமாம்—வருமேமமிளைய வனினவரவர்கள் பெறுதொகையில் வளருமாமென்னவாளுற்—றரமருவுமொரு நூறுமிருநூறுநூறுநூறுமிவையாங்—தகைமைபெறு கணித தொகைதிரிபுகல்பவரையசலேமிகுசரதசம்பிறுதியெனுமாங்—கரமருவுமுதயதாரகையே நீயிவையெலாங் கருதியுலகுலவிவினவிக்— கனமயிலைநகர்பூதநாதன் மகிழ் சமுகமிசைகணிதவிடைமொழிகுவாயே.
யாழ்ப்பாணம்

இதிற்பிழையிருந்தாற்றிருத்திவாசிக்கவும்.

*To the Editors of the Morning Star.*

SIR,

Will you please insert this piece in your columns.

*My dear Star,*

In answer to my question in No. 18. VOL. II. you have brought the answer signed by a "number of Christians" in No. 21. VOL. II. So much is good. But that is not the answer expected. As one line in the answer is "we are ready to raise our right hand of consent to do all we can to put down *caste*." Whereas why could they not say—*to bring our heathen wives to Gospel light*? True, *caste* is a great thing in this land. But greater things need not be done in preparation for performing smaller ones.—Smaller ones may be for greater.—Though the notion of *caste* should be extirpated, yet the females may be without coming to the church on special days. But if they can do this first they can easily get over the other. I rejoice, because it is not answered that they will do so, if the degree of *rank* or *caste* is secured for their in places of worship. Conditionally it may be an obstacle. And I rejoice exceedingly, and pray God for such a forwardness in my beloved brethren. As they say, *caste* is a great tree which stretches its branches and casts a pervading shadow over all our Tamil land It canot be destroyed at once· Great enormous trees are usually cut down by little and little, by chopping off its twigs &c. Tell them that if they will begin to bring their females to places of divine worship, then, at least, they have chopped off a twig of the great tree *caste*. Plead with them for their wives soul's salvation, and teach them that their other reasons are vain, and their conduct inexcusable I trust and load you, my dear Star, with these paramount and peculiar matters worthy of their consideration Trusting upon you for uprightness of duties, I am,

Yours as ever

*November 10th* 1842. THE LOVER.

எனதருமைத்தாரகையே,

இரண்டாம் புத்தகம் ௰௮ம். சஞ்சிகையிலே கேட்ட கேள்விக்குத் தொகைப்பட்ட கிறிஸ்தவர்கள் கையொப்பம்பட்ட ஒரு மறுமொழியைக்கொண்டு வந்தாய். நல்ல மறுமொழிதான். ஆனாலும் அப்படி மறுமொழி வருமென்று காத்திருக்கவில்லை. சாதிவித்தியாசத்தைத் தள்ளுகிறதற்காக எங்களால் இயன்றளவு முயற்சியாயிருக்கிறோமென்றதாக மறுமொழியிற் சொல்லியிருக்கின்றது. மனைவிகளைக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுவாவென்றேன் அப்படிச் சொல்லவில்லை. இந்தத் தேசத்திற் சாதிவேற்றுமை பெலனுள்ளதுதான். ஒரு சிறுக் காரியஞ் செயகிறதற்காகப் பெருங்காரியங்களை ஆயத்தப்படுத்துகிறதில்லையே. ஒரு பெரிய காரியத்திற்காகச் சிறுக் காரியங்களைச் செய்யலாம். சாதிவேற்றுமையைத் தள்ளியும் அவர்கள் கோவிலுக்கு வராமல் இருந்தாலென்ன? கோவிலுக்கு வந்தபொழுதே சாதிவேற்றுமை சற்றே நீங்குகுது. ஆனாற் சாதிவேற்றுமை பண்ணிவைப்பார்களாகில நாங்கள் கூட்டி வருவோமென்று சொல்லாமல்விட்டதெனக்குச் சந்தோஷம். அதொரு தடையாயிருக்கும். இப்போ ஒரு தடையும் இல்லையே. இரண்டும் ஒரு முறையில் நீங்கிப் போகின்றதே. ஆகிலும் வெட்டக்கூடாத மரங்களை ஒரு வெட்டிலே விழுத்தக்கூடாதென்று அவர்களுக்குச் சொல்லு? கிளை கிளையாயாகுதல் வெட்டிவிழுத்தவேணுமே. அதன் கிளைகளில் ஒருசிறிய இந்தக் காரியத்தை முதற் செய்யச் சொல்லு. என் அருமைத்தாரகையே, இப்படிப்பட்ட ஒரு நல்ல துவக்கம் வந்திருக்கிறதற்காகக் கத்தாவைத் துதித்துச் சந்தோஷிக்கிறேம். என்தாரகையே, இப்படிப்பட்ட மேலான காரியத்தை ஒவ்வொருவரண்டைக்கும் போய்ச் சொல்லு. இதை நிதார்த்தமாய்ச் செயவாயென்றநம்பியிருக்கிற உனது நண்பன்;

௲௮௱௪௨. கார்த்திகை மீ. ௰. தி.

*To the Editors of the Star.*

In a recent No of the M. Star a person writing upon the Question "How shall Christian husbands induce their heathen wives to attend public worship on the sabbath?" has answered that caste and other nonsensical and heathenish follies must be overthrown to secure the desired object.

It is clearly known to all India that the observance of caste is at present thought so binding that the loss of life even would often be preferred to its neglect. This power of caste has been strengthened by long habit and is seemingly more difficult to oppose than any authority from the Vedas. An European would sooner abandon the use of flesh than a native of India would give up his observance of caste.

Now the Christians connected with the American Mission in Jaffna were not sent out from a Christian land, but were by the incessant labor of 25 years taken from a superstitious nation with whom they continually mingle in their daily conversations and in all kinds of business. How can we then expect at once to take away the observance of caste from a community wholly surrounded by an idolatrous people and thus uproot an evil, which like an enormous mountain extends its top to the heaven and its root to hell below. I do not mean to imply, nor is it to be fancied that the observance of caste cannot ultimately and by proper means be removed; nor that Christians should be bound by its rules. On the contrary I am happy to say that many petty differences, arising from caste among Christians, have been imperceptibly destroyed. Inferiors and superiors now often take equal seats at meals and in company. It is so in the use of the cup at the Lord's table. Even marriages between individuals of different castes, never dreamed of by heathen, are not unfrequently celebrated.

It must be observed, however, that though the plan of taking heathen wives to church and the observance of caste may be in some respect apparently connected, yet there is a broad distinction between them. For if the 1st question depends upon the latter, the latter also should depend upon the former. But long experience has shown us the contrary. For we have witnessed in times past that many heathen wives, in no way connected with the church and even of notable families attended the services in the church on the sabbath. But this did not at all prove that they had renounced the distinction of caste.

Moreover the subject in hand is of greater importance and more worthy of immediate attention and action than the subject to which the writer alludes. We may be excused if we delay for a while the renunciation of caste, but can never be if we for a moment defer seeking the salvation of our wives.

Let it be supposed that the difference of caste will last for 10 or 20 years to come. Will you then by taking no such step as that now proposed have your wives destined to perpetual ruin? Will you thus bring woe upon yourselves? Ah! my friends, to put our confidence in the eradication of caste while we neglect our wives' salvation, would be as foolish as to forbid our wives to take care of their sick and suffering infants until they shall have finished cooking our rice.

To what extent shall we act on such principles? Shall we deal so cruelly towards those whom we so dearly love, and whose minds as well as bodies we are to regard? If we continue *alone*, to reap the advantages of Christian education and Christian religion we are inferior to the hen who calls upon her mate and young to partake of what she eats. Let it not be so. If we have destined our wives who are bone of our bones and blood of our blood, yea, destined a part of ourselves as dear to us as a right hand, to be eternal dwellers in hell fire, because we imagine that a strange cause would help us, how can we say that we daily delight in and seek their welfare? Let us not give place to such unpardonable cruelty. Nothing, I am sure, gives greater sorrow to the hearts of our dear benefactors than that we so long under their instruction should keep our wives from the knowledge of salvation. By such a cause we are in reality laying an axe at the root of Christianity.

Therefore, dear brethren, as we have turned our eyes, so let us be the means of turning the eyes of our wives towards that magnificent temple, where our beloved Redeemer sits by the right hand of his Father, and where their eternal portion will be, if following on to know the Lord, they look not back as did Lot's wife. Let us not make the vain excuse that caste must first be done away, but let us each for himself say I will use my exertions in the strength of the Almighty God to bring my wife to the church hoping it may be the means of her eternal salvation and that of others.

> To God, most worthy to be prais'd,
> Be our domestic altars rais'd;
> Who, Lord of heaven scorns not to dwell
> With saints in their obscurest cell.

*Jaffna, Nov. 14th 1842.* A. DISCIPLE.

---

An answer to a question on Grammatical Tenses in No. 21.

கனம்பொருந்திய உதயதாரகாதிபரவர்களுக்கு வந்தனம்.
தயவுவைத்து இதற்குமிடங்கொடுங்கள்.

யாழ்ப்பாணக் கச்சேரி இலக்கணநுட்ப விசாரணைகாரன் கடாவிய கடாவை அவிழ்த்தற்பொருட்டு யாழ்ப்பாண மாணாக்கனென்றொருவரொருவாற்றாற்றுணிந்து அவரது கடா அவர் போற்பட்டவர்கட்குத் தகுந்ததல்லவெனப் பணித்து விடை கொடுத்தார். அவர் கொடுத்த விடை இலக்கணவாராய்ச்சியுள்ள எம்மெல்லாருக்கும் பூர்த்தியாயிருக்கின்றது. அதற்கு மாறாக இலக்கிய நுட்ப விசாரணைகாரன் குமாரன் இலக்கணநுட்பவிசாரணைகாரன் அவரது சரிவிடையைச் சங்கையாயாட்சேபிக்கிறார். அவ்விடையிற் காணாத அநேகங் குற்றங்களை வீணாய்ச் சாற்றுகிறாரே, அது சரியா? கூத்தாட்டுச் சிலம்பம் படைவெட்டுக்காகுமா? மனப்புலி நூதவியார் சரவணமுத்து சரியெனச் சொல்லாரா? தன்னெண்ணத்தை முக்காலத்து நிறுத்தி வெல்லாரா? தமது வலிகொண்டவர் விடை புல்லாரா? "கைக்கூலி வாங்க எண்ணம்" என்றதுங் "கைக்கூலிவாங்கினதைக் கண்டேன்" என்றதும் ஒரே கருத்தெனக் கூறி வென்றாரே. இவ்விசாரணைகாரனேனுளறினார்: விசாரணைபண்ணாதுகுளறினாரே, அவரெண்ணத்திற்கு அது சரிசரியே. அவர் போலும் இலக்கணிகள் இதற்கிணங்கிறார்களென்றாரே அவர்களைத்தானே யாழ்ப்பாண மாணாக்கன், "அவரை அறியாதவர்களாக்கு" மெனச் சொன்னது, இதாவிதாமெனத் திருத்தினவருமிவர்க்கு முன்னில்லாரே, யாழ்ப்பாண மாணாக்கன் சொன்னதே சரி இப்படிப்பட்ட கேள்விகள் சளசளப்பன்றிப் பளபளப்பல்ல.

௲அ௱சஉ ஆ. கார்த்திகை மீ ௰௩ தி. இவ்விடம்
யாழ்ப்பாணம். எழுவர் கையொப்பம்.

---

*"To the Editors of the Morning Star."*

GENTLEMEN,

Will it comport with your purposes to publish in your valuable paper such a work as Beschi's வேதியரொழுக்கம் or "Instructions to Catechists" with such notes as may be necessary to correct the errors contained in the original? It contains 20 Chapters with an Appendix equal to about one Chapter. I would propose its being printed in about 22 numbers of the "Star" beginning in January, making one Chapter of Memoirs of the illustrious Jesuit. இப்படிக்கு

சின்னையா.

If our respected Correspondent, will have the goodness to send us a copy of the work he mentions, that we may judge of the amount of space in our columns required for a single chapter, we shall be better able to judge of the expediency of publishing it as he proposes.—*Editor.*

## புதின சங்கதி.

### யாழ்ப்பாணம்.

மரணசங்கதி—யோக்கியத்திலும் புத்திரபாக்கியத்திலும் இனக்கூட்டத்திலுந் தனத்தேட்டத்திலும் மற்றும்பெறுபேறுகளிலும் மேம்பட்டவரும் உடுப்பிட்டி திருவல்லை உயர்குல வேளாளருந் தனதுவிவாகநாள்முதலாகத் திருவண்ணைநகர்வாசமாயுமிருந்த ம. றி. றி. மயில்வாகனமுதலியார் அவர்கள் தனது மாமனாரும். சிறி. கைப்பித்தான் சந்திரசேகரமுதலியாரது தவக்குமாரருமாகிய, ம. றி. றி. சுப்பிரமணியமுதலியார் அவர்களுடைய வருத்தம்பார்க்கிறதற்காகவும் அவர்களுடைய தருமமுயற்சிகளை நடப்பிக்கிறதற்காகவும் திருவல்லைக்குப்போயிருந்த இடத்தில் இந்த மீ. அதி செவ்வாய்க்கிழமையிரவு சடுதியாகவந்த ஓர்வியாதியினாற் பரகதியடைந்துபோனார். அதற்காக இவரது இனபெந்துக்களும் பிரதானமாக இவரதினவலாகிய. ம. றி. றி. குமாரசாமிமுதலியார் அவர்களுந் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கிறார்கள். அப்படியே நாங்களனைவோருந் துக்கித்துப் புலம்புகிறோம். மேலும் புறவூர்களிலிருக்குமிவருடைய உற்றார் சினேகிதர்முதலான சகலருமறியும்படி இத்தைத் தங்கள்தாரகையிற் பதித்துப்பிரசித்தஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம் திருவண்ணைநகரத்தார்.

தனதுமாமனார் சீக்கிரம்மரணித்துப்போவாரென்றெண்ணி அவர்காரியங்களைப்பார்க்கப்போயிருந்த இவர் மரித்துப்போகவும் அவர்பிழைத்திருக்கவும் வந்ததைப்பாருங்கள். நாங்கள்கடவுளை மறந்து லவுகீகக்கவலையில்வீழ்ந்து அழுந்தியிருக்க மரணமென்னுங்கொடிய வாளானது திருடனுக்குச்சரியாக நாங்கள் நினையாதபிரகாரம் வந்து எங்களை எங்கள்மகிழ்ச்சிக்கிடையிலே சங்கரித்துப்போடுகிறதினால் நாங்கள் அதற்கெச்சரிக்கையாயிருந்து எங்கள்காலத்தை அவம்போக்காமல் மறுமையில் மோட்சபதவியடையும்படிக்கான வகைபார்க்கவேண்டும்.

மரணசங்கதி—திருவண்ணைநகரத்து உயர்குல வேளாளராகிய ம. றி. றி. இராமலிங்கமுதலியாரவர்களுடைய தவக்குமாரரும், இயாழ்ப்பாணம் ரேகுச்சோதனைக்காரருமாகிய, ம. றி. றி. சிதம்பரநாதர் அவர்களுடைய பாரியும் நீர்வேலி மேற்படிவேளாளராகிய ம. றி. றி. கதிரித்தம்பியார் அவர்களுடைய குமாரத்தியுமாகிய சின்னாச்சிப்பிள்ளை இந்தமீ க தீ செவ்வாய்க்கிழமைபரகதியடைந்துபோனதற்காக நாங்கள்சகலரும் மிகவுந்துக்கிக்கிறோம்.

இங்ஙனம் திருவண்ணைநகரத்தார்.

### சேன்னபட்டினம்.

பிறகிட்ட ஐப்பசி மீ ௨௪ந் தேயதி திங்கட்கிழமையிலன்று சென்னபட்டினத்திற் கடும்புயலுண்டானதினால், ஐந்துகப்பல்கள் உடைந்ததுமன்றி ஏறக்குறைய (௨௰) சனத்துக்கு மாண்டுபோனார்களென்பதைக் கேள்விப்படுகிறபொழுது அளவிறந்த துக்கமுள்ளவர்களாயிருக்கிறோம்.

மார்க்கஸ்-டுவிட்டேல என்பவர் அமேரிக்காவிலே கடைசியாய் ஆரம்பித்த யுத்தத்துக்கு இரண்டாந் தளகத்தனாயிருந்த காலத்தில், ஆடம்பரமும் வேடிக்கையும் வீண் விநோதமுமான காரியங்களில் மெத்தப் பிரியமுள்ளவராயிருந்து (௲௮௱௩௰௪) ஆண்டளவில் அவருடைய முன்னிருந்த குணங்களெல்லாம் மாறிப்போனதினால் மெத்தப் பயபத்தியுள்ளவரும் மார்க்கத்தில் மிகுந்த பத்திவைராக்கியமுள்ளவருமாகித் திருச் சபையிற் சேர்ந்திருந்ததுமல்லாமல் அச்சபைக்கொரு மூப்பனாகவும் இருந்தார். அவருடைய வீட்டாருங் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். இவர்கள் எல்லாரும் ஞாயிற்றுக்கிழமைகளிலே வேலைகாரருடன் கூடிக் காலமே அல்லது பின்னேரம் பிரசங்கத்துக்குப் போவது வாடிக்கை. சௌக்கிய காலங்களிலே இவர்கள் பிரசங்கத்துக்குப்போகிற இடங்கிட்டத்தட்ட ஒருமயிலுக்கு மேற்பட்ட தூரமாயிருந்தாலும் இவர்கள்வண்டில் குதிரைமுதலானவைகளில் ஏறிப்போகாமல் காலநடையே போவார்கள். இரவில் எட்டுமணிவேளையில் தாங்கள் சாப்பிடுகிற அறையிலேதானே இராசாதிகார போதகன் பண்ணும் பிரசங்கத்தைக் கேட்கும்படி எல்லாரும் வந்து கூடுகிற வாடிக்கை உண்டு. இந்த இராசாவைப்போலொத்த மற்றும் இராசாக்களில் இவ்வளவு பயபத்தியான குணங்களும் தேவபத்தியான எண்ணங்களும் கிறிஸ்தவனுடைய நடைக்கும் அவனுடைய நாமத்துக்கும் உரித்தானசெயல்களுங் காணப்படவில்லை. இந்த மார்க்கஸ் டுவிட்டேல்என்பவர் இந்துதேசத்திற்கு மகாஅதிபதியாய் வந்தாரேயாகில் இவர்ஒவ்வொரு நோக்கத்துக்கும் நன்முயற்சிக்கும் ஒரு சிநேகிதனாயும் அத்தை மென்மேலும் பிரபலியப்படுத்துகிறவராயும் இருப்பாரென்று நாம் காத்திருக்கவேண்டியிருக்கின்றது.

### DWARKANATH TAGORE.

லொங்தோம் நகரியிலிருக்கப்பட்ட லாட் மேயர் என்ற உத்தியோகஸ்தன் இவனையும் மறுபேரையும் விருந்துக்கழைப்பித்து, விருந்துமுகிந்து வீட்டுக்குப்போகிறசமயத்தில், இந்தத் தாகோர் என்பவன் சனதூரவர்களிலிருந்த பொல்லாப்புக்களிற் சிலது இங்கிலீஸ்காரருடைய உதவி ஒத்தாசையினாலும் அவர்கள் ஆளுகையால் வரப்பட்ட பலாபலன்களினாலும், நீங்கிப்போயினவென்பதற்குத் திருட்டாந்தமாகத் தங்களுக்கு மகமதாளுகையினால் வரப்பட்டகொடுமையிலிருந்தும் அதிலுயதிகமாகறாசருடைய பயங்கரப்படத்தக்க அநீதத்திலிருந்தும் விலகிக்கொண்டதுமன்றி, அவர்களுடைய அறியாமையிலிருந்தும், அசுபாபமான கேடுகெட்ட அவபத்தியினின்றும் பிராமணருடைய தத்துவத்தினின்றும் சாதிபேதம்பார்க்குமொழுங்கினின்றுந் தவறிக்கொண்டார்கள். இவைகள் கொஞ்சக்காலத்துக்குமுன்னே இந்துச்சனங்களில் விழுந்து அதிக வலிமையுடன் அவர்களிற்பாய்ந்ததினால் மகமதுமதத்தாராலுமறாசியராலும் வரப்பட்ட அடிமைத்தனத்துக்கவர்களேதுவாயிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் கொடுமையெல்லாம் இப்பொழுது அதிக மதிகமாக அற்றுப்போகின்றது. இங்கிலீஸ்கல்வியெங்ஙனம் பரம்பிற்றோ அங்ஙனமெல்லாம் அது அவர்களுடைய சாஸ்திரவிதிகளையெல்லாந் தள்ளம்பாறி விழப்பண்ணக்கொள்ளச் சீர்திருத்தத்துக்கும் அறிவென்னும் வெளிச்சத்துக்கு முதற் கருவியாகிய கிறிஸ்துமார்க்கமோ அநேகமாயிரஞ் சனங்களுடைய மனதிற் பெரிய மாறுதலைப்பண்ணிற்று. இதைப்பற்றி ஒருவர் ஒரு பத்திரிகைவழியாயெழுதுகிறயாதெனில், இந்துமதக்கோட்பாடும் அக்கியான அவபத்தியின்பெலனும் அற்றுப்போனதினால் கிறிஸ்துமார்க்கவளர்ச்சி யெங்குங் காணப்படுகின்றது.

இன்னுமிவ்விடத்திலுண்டான மாறுதலைப்பற்றி டாக்குத்தர் டவ் என்பவர் சொல்லுகிறதாவது. ஒரு நாள் திங்கட்கிழமைகாலமே, நான் கப்பலைவிட்டிறங்கிப் பரிகார அறைக்குட் போய் அங்கே "ருமலோகன், சேன, கொம்பனியராகிய இரணவைத்தியர்" என்று பெரிய எழுத்திலே எழுதியிருந்ததைக் கண்டபொழுது, அது எனக்கு மெத்த ஒரு பெரிய நூதனமாயிருந்தது. எனெனில், இந்துவான்வன தன் செலவாக எரோப்பையருடைய மருந்தைச் சோத்துண்டுபண்ணித் துன்பக்காரருக்குக் கொடுக்கிறபடியினாலே ஒரு பெரியமாறுதலுண்டுபட வேதுவாயிருந்தது. ஏனென்றால், இந்துதேயத்தவர்களுடைய தரும சாஸ்திர ஒழுங்குக்கும் தேசாசாரமுறைக்கும் ஒரு இந்துச்சாதியான் தன்னுடைய உயிர்த்துணையான சினேகிதனுடைய செத்தசரீரத்தைத்தொடுகிறதும் மெத்தக்குற்றமாயிருக்கும். அப்படியிருந்தும், ஒரு எழியசாதியின் பிணத்தைத் தொட்டால் அவனென்ன பிராயச்சித்தஞ் செய்தாலும் அவன் செய்த பாவம அவனை விட்டுத் தொலையவமாட்டாது. ஆகையினால் இந்துச்சனங்களுக்குள்ளே உடற்கூற்றிலக்கணமில்லாதபடியினாலே அவர்களுக்கு இரண வைத்தியந் தெரியாது. இப்பொழுது ஏறக்குறைய (௩௰) வருடக்காலத்துக்கு முன்னே கற்குத்தாவிலே கோவரணமேந்தார் ஆயுள்வேதசாலையொன்றை உண்டாக்கினார்கள் அதில் யோக்கியவான்களாகிய துலுக்கப் பிள்ளைகளும் மற்றுஞ் சங்கைபோந்த இந்துக்களும் படித்துவந்தும் (௨௰) வருடக்காலமாக யாதொரு பலனையுங் காணாதபொழுதே இடபொழுது (௫) வருடத்துக்கு முன்னே கோவரணமேந்தார் ஒரு ஆயுள் வேதச்சாலையை ஸ்தாப்பித்திருக்கிறார்கள். அதில் இப்பொழுது இந்து தேசத்தின் பற்பல பட்டினங்களிலுமிருந்து போய் (௭௰) மாணாக்கருக்கு மேற்படப்படித்து வருகிறார்கள். இப்பொழுது பிராமணரும் வேறும் பல போதியமனிதரும் யாதொரு பயமுமின்றி மெத்த இட்டமாகச் செத்தஉடம்புகளுக்குச் சத்திரம்வைத்துப் பாாத்து உடலினது கூறின்னதென் அறிகிறதை நீங்களுங் காண்பீர்கள். செத்த சரீரத்திற்றொடுவது சிலகாரியங்களில் மெத்தப் பாவமாயிருந்தாலும் அவ்வுடலின் கூறுபாட்டை அறிகிற நோக்கத்துடனே சத்திரம் வைத்துப் பார்க்கிறதற்குச் சாஸ்திரமுந் தடை சொல்ல இப்பொழுது எதுவில்லாமலிருக்கின்றது. இப்பொழுது அதிலுள்ள அநேகம் பிள்ளைகள் இரண

வைத்தியத்திலும் மற்றுங் காரியங்களிலும் மிகவுந் தேர்ச்சியடைந்து பள்ளிக்கூடத்தையும் விட்டுப்போயுமிருக்கிறார்கள். இப்பொழுது நாங்களும் வைத்தியரென்று சொல்லி அநேகம் ஆயிரம்பேருடைய உயிரைவதைக்கிற மடையரைப்பார்க்கிலும் ஆயுள்வேதத்தைத் தெளிவுறப்படித்திருப்பது இந்துதேசத்துக்கெவ்வளவு சலாக்கியமாயிருக்கும் பராபரன் அருளுகிற லவுகிக நன்மைகளனைத்திலும் சனங்களுக்கு முறைக்கு முறை வரப்பட்ட பிணிகளை மாற்றுவதே பிரதான நன்மையாயிருக்கின்றது. இந்து தேசத்தவர்களுக்கு இன்னமுண்டான கட்டுகளினின்று நீங்கி உன்னதமாய் உயர்ந்து உலகத்தில் இப்பொழுதிருக்கிற சீர்திருந்தின சனங்களுடன் இணைவாய் வருகிற காலங் கிட்டிவிட்டதென நம்புகிறோம். எல்லாவற்றிலும் அதிகமாக, இந்து தேசத்தார் தங்கள் கரங்களைப் பராபரனிடத்துக்கு நீட்டிச் சுவிசேஷத்தில் அவர் கொடுக்குமிரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுவார்களென்றுங் காத்திருக்கிறோம்.

---

*From the Government Ordinance No 2. 1842.*

And it is further enacted, that from and after the passing of this Ordinance, if any woman shall be delivered of a child and shall, by secret burying or otherwise disposing of the dead body of the said child, endeavour to conceal the birth thereof, every such woman shall be guilty of an offence, and shall on conviction thereof, be liable to imprisonment, with or without hard labour, for any Term not exceeding 2 years, and it shall not be necessary to prove whether the child died before, at, or after its birth Provided always that if any woman tried for the murder of her child, shall be acquitted thereof, it shall be lawful for the jury by whose verdict she shall be acquitted, to find, in case it shall so appear in evidence, that she was delivered of a child, and that she did by secret burying, or otherwise disposing of the dead body of such child, endeavour to conceal the birth thereof; and, thereupon, the Court may pass the same sentence, as if she had been convicted upon an information for the concealment of the birth.

Passed in Council the first day of August One thousand eight hundred and forty two.

### சிசுவதை.

நியாயாலோசனைச் சங்கத்தாரின் சம்மதமும் ஆலோசனையுமுட்பட இலங்கைத்தீவின் அதியுத்தம மகத்துவந்தங்கிய தேசாதிபதியவர்களால் நிருபித்த கட்டளையென்னவென்றால்,

இந்தக் கட்டளை நிருபித்தலுண்டான அன்றைக்கும் அதன் பின்னும் யாதொருத்தி பிள்ளைப்பெற்று இரகசியமாய் யாதொருவருமறியாவண்ணம் விருண்டித்தாழ்க்க அல்லது அந்தப் பிள்ளையைக் கொல்லும்படிக் கெவ்வித செய்கையைச்செய்தாலும் அப்படிச்செய்தவள் குற்றவாளியெனக்கண்டு அவளுக்கு இரண்டுவருடத்துக்கு மேற்படாத ஒரு தவணைமட்டுங் கடூர ஊழியஞ்செய்துகொண்டு அல்லது ஊழியமில்லாமல் மறியலிலிருக்கும்படி தீர்ப்புக்கொடுக்கவேண்டுமென்றும் அப்படிப்பட்ட பிள்ளை பிறந்ததின்பின் செத்ததோ அல்லது பிறக்குமுன் செத்துதோவென்றத்தாட்சிபண்ணுவதவசரயல்லவென்றும்,

யாதாமொருத்தி தன் பிள்ளையைச் சாகக்கொன்றதற்காக விசாரணைபண்ணப்பட்டதின் பிறகு அவள் சுத்தவாளியாக நடுவர்களாலத் தீர்க்கப்படாமலும் அவளைத் தீர்த்த யூரிமாரென்னும் நடுவர்கள் விளங்கப்பட்ட அத்தாட்சியிலே அவள் உண்மையாகவே இரகசியமாய்ப் பிள்ளைப்பெற்றொழிக்க அல்லது அந்தப் பிள்ளையின் சடலத்தை வேறொரு விதமாயொழிவித்துப்போட அல்லது தான் பிள்ளைப்பெறவில்லையென்று மறைக்க எத்தனப்பட்டாலும் முன்சொல்லிய தண்டனைதானே இவளுக்குங் கோட்டார் கட்டளையிடவேண்டுமென்றும், (அ௱சஉ ம். ஆ.) ஆவணிமீ. (௧.)தேய்தி ஆலோசனைச் சங்கத்தார் யோசனைப்படி தீர்க்கப்பட்டது.

## SUMMARY OF NEWS.

### JAFFNA.

Communicated for the Star.

*Obituary*—We regret very much to hear of the death of Mylwagana Mudelliar, *Vellaly* of Oodupitty, resident of Wannarponna. The deceased was a man of great wealth and influence and of respectable origin and rank. He went to Oodoopitty about two months ago, and died there on the night of the 8th. instant, leaving behind him a large circle of relations and friends both at Wannarponna and Oodoopitty to lament his irreparable loss.

The deceased repaired to Oodoopitty to visit his maternal uncle who was dangerously ill and hoped to have succeeded to his good doings, after his death; but alas! the case has turned otherwise. While we forget our gracious Creator, being filled with the cares of this uncertain world, death comes suddenly upon us and removes us, from the objects of our earthly cares and attachments, to the solemn awards of the eternal state. How cautious ought we to be not to spend our precious hours in vain, but prepare to meet death with peace, and go to that blessed abode which is prepared only for them who fear God and keep his commandments.

"The man who is not sure of living one day reflects not upon the multitude of things, but only on the most important. The greatness of this world is that the man who was yesterday, is not to-day. The good we would do must be done before we are removed away by death."

S. Tambiahpullay.

Cholera in Jaffna.—Several cases of cholera have lately occured at Navantoory in the vicinity of Jaffna. The disease was apparently brought here by a man from Comilamoonai, adjacent to Manaar. The whole number of cases so far as we have heard, is 30; of which 14 have terminated fatally. One fatal case has also occured in the Chetty's quarter at Wannarponna, and another serious case at Moor's quarter, but the disease it is hoped, is abating.

We are glad to learn that it has nearly disappeared from the district of Manaar. The whole number of cases reported there is upwards of 700—deaths about 500.

Coffee planting in Ceylon.—We are happy to learn from the Colombo Observer of the 10th instant that the past season has been in the highest degree favourable for planting operations. It is also stated "that a far greater number of Coffee plants have been put into the ground during the season just closing than in any previous one in Ceylon."

It is the first season in which the planters of the Ambegameoa district have been able to make satisfactory progress, and on several of the estates they have this season made up from one to two hundred thousand plants on their lands.

The estates in the neighborhood of Humogena and between Kumegalle and Kandy have as much as 300 acres planted with the probability of doubling the quantity the next season.

The fruit-bearing portions are producing enormous crops, far exceeding one pound the bush, which used to be considered a large calculation.

The oldest estates in the neighborhood of Kandy are giving very heavy crops: we understand the Rajawalle estate is expected to give 10.000 bags from 400 acres now in full bearing.

The cultivation of Coffee amongst the natives is being increased to a large extent; in many of the villages in the favorable districts small fresh patches of Coffee plants meet the eye at every step.

It is difficult to form more than a tolerable guess at the probable amount of the crop this season, but we think from 60 to 70,000 cwts. of plantation Coffee and 100 to 140,000 cwts. of the common sort will be shipped in 1843. The shipments to the present time from the first of Jan. 1842, is as nearly as possible 100·000 cwts. altogether.

There is no doubt but that in two or three years, Ceylon alone will produce Coffee equal to the present consumption of Great Britain.

Gale at Madras.—A severe gale was experienced at Madras on Monday the 24th ult., which caused considerable damage to the shipping in the roads and some loss of life. Signals were made by the master attendant for the shipping in the roads to put to sea which they all did; but subsequently five were wrecked by stranding on the coast, and the others returned after the storm subsided having experienced more or less damage. About 20 persons are supposed to have been drowned in connection with these unfortunate disasters.

### AFFGHANISTAN.

*Rescue of the Prisoners.*—Our readers, will rejoice with us to hear that the late unfortunate captives in the hands of Akbar Khan the chief of the Affghans have at last been rescued. It appears by a narrative given by one of the party that orders had been given by Akbar Khan to convey the prisoners from Cabul to Toorkistan, with the intention it is said of distri-

buting them among the Tartar chiefs in that quarter.

They left Cabul on the evening of the 25th Aug. under an escort of 300 infantry commanded by Sahid Mahomed Khan, formerly a Subadar in the British service. They arrived at Bamean on the Toorkistan frontier on the 3d. of September. Private proposals were made by one of the party to Sahid Mahomed, to forsake the interest of Akbar Khan and to carry the prisoners through the mountains towards Ghuznee to the camp of general Nott, with the promise of giving him a lack of rupees as his reward. He then seemed to think it doubtful which party would gain the day and laughingly said such a thing was impossible or at least very difficult. He was left to consider the matter. The next day another of the party spoke again to him on the subject but without coming to any result. On the 10th Sept. news reached the party that Ghuznee had been destroyed by general Nott, and on the 11th orders were received for their immediate departure to Kholoom in the Toorkistan country, and to put to death all those who were too weak to proceed. At this time the situation of the prisoners was horrible in the extreme, having no prospect before them but that of perpetual slavery and imprisonment in the dungeons of Toorkistan. Shortly after this order was received the chief of the prisoners were summoned to a private audience with Sahid Mahomed. When they had assembled the Commandant told them an order had come for their instant march to Kholoom, and shewed a letter directing that the prisoners should be made over to the chief of that place. He then went on to state that he had received a message from general Pollock's camp promising that if he would bring the prisoners to Cabul, general Pollock would give him 20,000 rupees and 10,000 rupees per month for life, and said:—"I know nothing of general Pollock, but if you will sign a paper guaranteeing to me this sum, I will join your interests heart and soul." An agreement was subsequently drawn up by Sahid Mahomed and the prisoners unitedly bound themselves to give the stipulated reward, and afterwards added 4 months pay to each Sepoy on condition of their being taken to Cabul.

On the morning of the 12th Sahid Mahomed raised his flag of defiance on one of the towers of the fort, and sent off all of his party who were supposed to be in the interest of Akbar Khan, and the whole party set diligently to work to prepare for a seige which they anticipated; but hearing of Akbar Khan's defeat at Tazeen, they resolved to leave Bamean and proceed with their small guard towards Cabul. They left on the morning of the 16th; on the 17th they crossed the Khaloo mountains 13,000 feet high, and halted near Kharrar where they were met by Sir Richmond Shakspeare with 610 Kuzilbash horsemen who had come to their aid. On the 19th they were met on the road by general Sale with 1,000 cavalry, 1,000 infantry, and 2 guns, who had the day before started for their assistance. The arrival of this force was most providential, as Sultan Jan commandant at Ghuznee we suppose, after being beaten by general Nott set out to secure the prisoners and would probably have recaptured them, had not the force under Sir Richmond Shakspeare arrived as it did; indeed it is stated he was only *two hours too late.* Having a superior force the enemy was even then not driven off till he heard of General Sale's approach.

The number set at liberty is a *hundred and four*, besides a few others found at Cabul. Unfortunately Capt Bygrave, one of the prisoners was not with the party who were rescued and it is supposed he is with Akbar Khan.*

With this exception all are restored, having suffered for eight and a half months, captivity, privations and hardships of various kinds. This event calls for the devout acknowledgements of every heart that has sympathized in their misfortunes.

* Intelligence has more recently been received, stating that Capt. Bygrave had also escaped and reached Cabul.

## NOTICE.

Notice is hereby given that the sale of the Salt Rent of the Jaffna Division of the Northern Province for the year 1843 will be held at the Cutchery on Monday the 21st day of November next.

## அறிவித்தல்.

௲௮௱௪௰௩ ஆண்டு யாழ்ப்பாணம் உப்புக்குத்தகையை வருகிறகார்த்திகை ௴ (௨௰௧ந்) திகதியாகிய திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் விற்கப்படுமென்றித்தால் அறிவிக்கப்படுகுது.

H. O'Grady, *As. Agent.*

## NOTICE.

Notice is hereby given that the Sales of the Dry Grain Rents, exclusive of Verago, will be held at the Cutchery on the days hereafter mentioned. The rent will be for four months being December 1842, January, February, and March 1843.

| | | | |
|---|---|---|---|
| Jaffna, Poonareen, &c. | on Wednesday | 23d. | November. |
| Valigama, North, | on Thursday | 24th. | do. |
| " East, | on Friday | 25th. | do. |
| " West, | on Saturday | 26th. | do. |
| Vademeratchy | on Monday | 28th. | do. |
| Tenmeratchy, Patchilapale and Caratchy | on Tuesday | 29th. | do. |
| Valena, Islands and Delft | on Wednesday | 30th. | do. |

*Jaffna, Cutchery 15th November 1842.*

## அறிவித்தல்.

வரகு பிறநீங்கலாக மற்றுந்தானியங்கள் இதன் பின்ஞற் காண்கிற திகதிகளில் யாழ்ப்பாணங் கச்சேரியில் விற்கப்படும். குத்தகையை நாலுமாதத்துக்கு அதாவது ௲௮௱௪௨ம் ஆண்டு மார்கழி ௴. ௲௮௱௪௩ம் ஆண்டு தை, மாசி, பங்குனி இந்த மாதங்களுக் குத்தான்.

யாழ்ப்பாணம், பூனகரி, பல்லவராயகட்டு — இந்த ௴. ௨௰௩ந். திகதி புதன்கிழமை.

வலிகாமம் வடக்கு, இந்த ௴. ௨௰௪ந். திகதி வியாழக்கிழமை.

வலிகாமம் கிழக்கு, இந்த ௴ ௨௰௫ந். திகதி வெள்ளிக்கிழமை.

வலிகாமம் மேற்கு, இந்த ௴. ௨௰௬ந். திகதி சனிக்கிழமை.

வடமிருட்சி, இந்த ௴. ௨௰௮ந். திகதி திங்கட்கிழமை.

தென்மிருட்சி, பச்சிலைப்பளி, கரச்சி, — இந்த ௴. ௨௰௯ந். திகதி செவ்வாய்க்கிழமை.

வேலணை, தீவுபற்று, நெடுந்தீவு, — இந்த ௴. ௩௰ந். திகதி புதன்கிழமை.

யாழ்ப்பாணம்கச்சேரியில் ௲௮௱௪௰௨ கார்த்திகை௴ ௰௫தீ.

CONTENTS.—அட்டவணை.


| | pages | | |
|---|---|---|---|
| A dialogue between a Brahmin and a student of the Batticotta Seminary on the doctrine of transmigration - - | 265 | இது ஓர் பிராமணனுக்கும வட்டுக்கோட்டையிற்சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் படித்த ஒரு மாணுக்கனுக்கும் நடந்த சம்பாஷணை | 265 |
| Communications - | 267-272 | கடிதங்கள் | 267-272 |
| Pancha-Tantra-Katei - | id. | பஞ்ச தந்திரக் கதை | ib. |
| Hints on the Theory and Practice of Gardening - - | 273 | சோபனசெய்தி ௪வது. | 273 |
| Auspicious occurrneces No. 4th. | ib. | | |
| Communications - - | 274-27 | கடிதங்கள் | 274-277 |
| Summary of News - | 2797 | புதினசங்கதிகள் | ib. |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.